879

THE "VAKIL"—TAMIL LAW MONTHLY FOR THE PUBLIC

# "வக்கீல்"

879
4.50.
10

★

## இந்த இதழில்

ஒத்தி ரத்து
புதிய திருத்தச்சட்டம்

கூட்டுறவு சங்க வழக்குகள்

முனிசிபல் வரி
அதிகமென்று சிவில்
கோர்ட் தாவா

வெல்ல கண்ட்ரோல்
அதிகாரிகள்

கூட்டுறவு சங்கங்கள்
போனஸ் கொடுக்க
விதிகள்

விபரங்கள் உள்ளே
பார்க்கவும்

★

பொது மக்களுக்குத் தேவையான
புதிய சட்டங்களையும் கண்ட்ரோல் முதலிய
விதிகளையும் உடனுக்குடன்
விமர்சனங்களுடன்
விளக்கும்

## தமிழ் சட்டப் பத்திரிகை

(மாத வெளியீடு)



OFFICE OF THE REGISTRAR OF
11 DEC 1950
MADRAS
1905

THE "VAKIL" டிசம்பர்-1950 4 அணா

# அடுத்து வரும் இதழ்களில்

## "தொழிலாளர் பகுதி"

பலவகைப்பட்ட தொழில்களில் வேலை செய்யும் தொழிலாளர்களின் நன்மைக்காக உள்ள சட்டங்கள் எவை? ஒவ்வொரு தொழிலாளிக்கும் தினசரியோ, மாதம் ஒரு முறையோ குறைந்த பட்சமாக எவ்வளவு சம்பளம் கொடுக்க வேண்டுமென்று ஏதாவது சட்டம் அமுலில் இருக்கிறதா? நீங்கள் முதலாளியாக இருந்தாலும், தொழிலாளியாக இருந்தாலும் இவ்விதமான சட்டங்களைத் தெரிந்துகொள்ள வேண்டியது மிக அவசியமல்லவா? 1951 ஜனவரி "வக்கீல்" இதழில் ஆரம்பிக்கப்படும் "தொழிலாளர் பகுதி" என்ற தலைப்பில் வரும் விஷயங்களைக் கவனித்து வரவும்.

ஃ ஃ ஃ

## "புகார்ப் பெட்டி"

சட்ட சபைகளால் செய்யப்படும் சட்டங்களிலும் அவைகளை அமுல் நடத்த சர்க்காரால் ஏற்படுத்தப்படும் விதிகளிலும் குறைபாடுகள் இருப்பது சகஜமே. அப்படிக் குற்றபாடுகள் இல்லாவிட்டால் அடிக்கடி சட்டத் திருத்தங்களும் புதிய புதிய விதிகளும் வந்துகொண்டே இருக்குமா? ஒரு சட்டம் அமுல் நடக்கும்போது தான் அதன் குறைபாடுகள் தெரியவரும். இவைகளை நமது பிரதிநிதிகளுக்கு எடுத்துக் காண்பிப்பது இக்குடியரசின் பொது மக்களுடைய ஓர் உரிமையாகும்; கடமையுமாகும். "வக்கீல்" பத்திரிகையால் இயன்றளவு இக்கடமையைச் செய்வதற்காகவே 1951 ஜனவரி "வக்கீல்" இதழ் முதல் "புகார்ப் பெட்டி" என்ற ஒரு பகுதி ஆரம்பிக்கப்படும். இப்பக்கத்தை "வக்கீல்" அன்பர்கள் உபயோகப்படுத்தலாம். அமுல் நடக்கும் சட்ட திட்டங்களிலும் விதிகளிலும் சர்க்கார் உத்தரவுகளிலும், நீங்கள் ஏதாவது குறைபாடுகளைச் சந்தித்தால் அதைச் சுருக்கமாகவும், பொதுவாகவும் "வக்கீல்" பத்திரிகைக்கு எழுதுங்கள். அது இப்பகுதியில் பிரசுரம் செய்யப்படும். சட்டதிட்டங்களில் உள்ள குறைபாடுகளை மட்டில்தான் எழுதலாம். அவைகளை அமுல் நடத்தும் குறிப்பிட்ட அதிகாரி அல்லது உத்தியோகஸ்தர்மீதுள்ள குறைகளைப்பற்றி எழுத இப்பகுதியில் இடம் கிடைக்காது.

"வக்கீல்" பிரசுரங்கள்—1

தமிழில்

## தொழிற்சாலைச் சட்டமும்-விதிகளும்

(சுருக்கம் - நமூனா 20-ன்படி எளிய தமிழில் எழுதப்பட்டது.)

தொழிற்சாலைகளில் சட்டப்படி தொங்கவிட உபயோகமானது.

தொழிலாளர்களுக்கு எளிதில் விளங்கக்கூடியது.

விலை அணா 8

தபால் சார்ஜ் பிரத்தியேகம்

கிடைக்குமிடம்:—

மானேஜர்

"வக்கீல்" காரியாலயம்

தபால்பெட்டி நெ. 26 : : கும்பகோணம் (தென் இந்தியா)

OFFICE OF THE REGISTRAR OF
11 DEC 1950

**சந்தாதாரர்கள் கவனிக்கவும்**

வருட சந்தாதாரர்களாகச் சேருபவர்களுக்குச் சந்தா அனுப்பும் மாதத்திலிருந்து 12 இதழ்கள் அனுப்பப்படும். சந்தா முடிந்தவுடன் புதிதாய்ச் சந்தா அனுப்பும்போது பழய சந்தா நம்பரைக் கண்டு எழுதவும். சந்தா நம்பர், சந்தாதாரரின் தபால் விலாசத்திற்குமேல் கொடுக்கப்பட்டிருக்கும் என்தான்.


"வக்கீல்"

பொதுமக்களுக்கான உயர்தர மாத சட்ட வெளியீடு.

**ஆசிரியர் கமிட்டி**

ஸ்ரீ T. சம்பத், B. A., B.L.,
,, G. நாகராஜ பத்தர், B. A., B. L.,
,, V. தியாகராஜன், B. A., B. L.,
,, A. பார்த்தசாரதி நாயுடு, B. A., B. L.,
,, S. சாம்பசிவய்யர், B. A., B. L.,
,, T. S. வெங்கடராமன், B. A., B. L.,
,, R. கோபாலசாமி, B. A., B. L.,
,, R. கிருஷ்ணமூர்த்தி, B. A., B L.,
,, P. சுந்தரேசய்யர், B.A., B.L.,
,, V. S. விஜயராகவாச்சாரி, B. A., B. L. (ஆசிரியர்)


## "வக்கீல்"

## (சந்தா விபரம்)

| | |
|---|---|
| வருட சந்தா அதாவது 12 இதழ்களுக்கு | ரூ. 3—0—0 |
| தனிப் பிரதி ... | 0—4—0 |
| வெளிநாடு வருட சந்தா ... | 6—0—0 |

"வக்கீல்" காரியாலயம்

தபால்பெட்டி நெ. 26 : கும்பகோணம்


## "வக்கீல்"

### விளம்பர விகிதம்

ஒரு முறை பிரசுரம் செய்ய

| | |
|---|---|
| பின் அட்டை முழுப்பக்கம் (இரண்டு கலர்) | ரூ. 100 |
| உள் அட்டை முழுப்பக்கம் | ரூ. 80 |
| உள் பக்கம் முழுப்பக்கம் | ரூ. 60 |
| ஷை ... அரைப் பக்கம் | ரூ. 35 |
| ஷை ... கால் பக்கம் | ரூ. 20 |
| ஒரு காலம் - அங்குலம் | ரூ. 5 |

(தொடர்ச்சியாய் 12 இதழ்களில் விளம்பரம் செய்ய 10% குறைக்கப்படும்.)


# "வக்கீல்"

பொது மக்களுக்கான சட்ட விஷயங்களை விளக்கும் மாதப் பத்திரிகை

மலர் 2 டிசம்பர் 1950 இதழ் 12

## பொருள் அடக்கம்


பக்கம்

குறிப்புகள் 3

புதிய சட்டங்கள்

சுருக்கியும்—வரிசையாகவும்-1950 ஆம் வருட சென்னைச்சட்டங்கள் 4

புதிய சட்டங்கள்

பொறுக்கியும்-விவரமாயும்-சென்னை விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டத்தில் மறுபடியும் திருத்தம் 5

வழக்கும்-தீர்ப்பும்

இன்கம் டாக்ஸ் ஆபீசில் சோதனை போட்டு கள்ள மார்க்கெட்காரர்களின் தஸ்தவேஜுகளைக் கைப்பற்ற முயன்ற போலீஸ் இன்ஸ்பெக்டர் 12

கூட்டுறவு சங்கங்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளும்-சிவில் கோர்ட்டின் அதிகாரமும் 14

முனிசிபாலிடியால் விதிக்கப்பட்ட வரி அதிகமாக இருந்தால்—கோர்ட்டில் தாவாசெய்து பரிகாரம் தேடிக் கொள்ள முடியுமா? 16

தெளிவு 18

கேள்வியும்-பதிலும் 19

கண்ட்ரோல்-லைசென்ஸ்-ரேஷன்

விலை நிர்ணயம்— இதர சர்க்கார் அறிக்கைகள். 22


★ "வக்கீல்" பத்திரிகையில் செய்யும் விளம்பரம் தமிழ் மக்கள் வசிக்கும் இடமெங்கும் பரவும். ★

ஜாதகம்! ★ ஆருடம்!!

இன்றே எழுதுங்கள். பிறந்த ஜில்லா, தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை.

ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.



கட்டண விபரம்: 1 முதல் 3 உமது எதிர்கால கேள்விகட்கு ரூ. 2. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35. ஜாதகம் கணிக்க ரூ. 3. ஒரு தசாவிற்கு புக்திவாரியாக பலன் எழுத ரூ. 12.

குறிப்பு: வெளிநாட்டுக்கு இரட்டிப்பு கட்டணம்.

Lt. Col. M. N. C. ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள்:—

தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்குத் திடீரென்று ரூ. 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது.

**மானேஜர்: வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ**

தெப்பக்குளம் P. O., திருச்சி.



## "எலிக்ஸிர் அஸ்வகந்தா"

மகரிஷிகள் ஆயுர்வேத உதவியால் ஆயுள் பலம், தேக புஷ்டி, ஆரோக்யம், யௌவனம் இவைகளை அனுபவித்து உதவி அருளிய சிறந்த ரத்த விருத்தி லேகியம் இதுவே. தொடர்ந்து உட்கொள்ள மலபந்தம் நீங்கி வயிறு, முதுகு, இடுப்பு வலிகள் ஒழித்து நல்ல பசியையும், சித்திரையையும் உண்டுபண்ணும். இல்லற வாழ்க்கையில் இணையில்லா இன்பமளிக்கும். தவிர இரத்த மூலம், குடல் வாய்வு, குடல் இறக்கம் இவைகளைக் குணப்படுத்தும். வயோதிகரை வாலிபர் என எண்ணச் செய்யும் ஔஷதம் எமது "எலிக்ஸிர் அஸ்வகந்தா"வே.

40 தோலா கொண்ட டின் ரூ. 10

தபால் செலவு பிரத்தியேகம்

ஆயுர்வேத வைத்தியர்

**T. V. ஜெயராம சாஸ்திரிகள்,**

வீரராகவ வைத்திய சாலா,

ஸ்ரீரங்கம் P. O., S. I.



வியாபாரிகளுக்கேற்ற புத்தகம்!

லிப்கோ

## பொது விற்பனை வரி

- சட்ட நுட்பங்களை நன்கு விளக்குவது.
- விற்பனை வரி சம்பந்தமான ஆக்ட், ரூல்ஸ், பாரங்கள் முதலியவை எல்லாம் அடங்கியது.
- கனம் பிரதம மந்திரியாரவர்களாலும், பல பிரபுக்களாலும் புகழப்பெற்றது.

தமிழ் பதிப்பு: விலை ரூ. 5-15-0. தபால் மூலம் ரூ. 6-8-0. ஆங்கிலத்திலும் இதே விலைக்குக் கிடைக்கும்

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி, விழுப்புரம் அல்லது எம். தாமோதரம் கம்பெனி, அப்பா பில்டிங், 9/286, எஸ்பிளனேட், சென்னை—1. அல்லது ஆபீஸ் எக்கியூப்மெண்ட் கம்பெனி, 2, அரண்மனைக்காரத் தெரு, சென்னை-1, அல்லது ரெயில்வே புஸ்தக ஸ்டால்கள்.



## "சக்தி ஆருடம்"!

ஸ்ரீ K. R. அப்பளாச்சாரியார் M.A.L.T. வைஸ் பிரின்சிபால், டீச்சர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை, 27-6-50ல் எழுதுகிறார்.

"தங்கள் பலன்கள் முற்றிலும் பலித்தன என்பதை சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்."

1 to 3 ஆருட கேள்விகளுக்கு ரூ. 1.

3-க்கு மேல் கேள்வி 1க்கு அணா 8.

1 வருட பலன் ரூ. 5.

ஜாதகம் கணிக்க ரூ. 2.

சக்தி கவசம் ரூ. 7-8-0.

வி. பி. பி. தனி

ஜாதகம் OR எழுதும் நேரம் தேவை.

N. B:—வெளி நாட்டிற்கு இரட்டிப்பு சார்ஜ் முன் பணமாய் தேவை.

சக்தி ஹோம், விருத்தாசலம் P.O. (S.I.)



உங்கள் எதிர்கால

குடும்ப சேமிப்பு

வயோதிகத்தில் சுதந்திரம்

இவைகளுக்கு இன்ஷ்யூரன்ஸ் அவசியம் நீங்கள் இன்ஷ்யூர் செய்துகொண்டீர்களா? மிக குறைந்த சந்தாவில் நிறைந்த பாதுகாப்புள்ள பாலிஸிகளை அளிக்கிறோம்.

இன்ஷ்யூரன்ஸ் செய்துகொள்ள விரும்புவோரும்,

ஏஜன்ஸி எடுத்துக்கொள்ள விரும்புவோரும்,

விபரத்திற்கு:— பிராஞ்சு செக்ரெட்டரி

**தி பெடரல் இந்தியா அஷ்யூரன்ஸ் கோ., லிமிடெட்.**

No. 7, சக்திவீரப்பன் கோவில் தெரு, தெப்பக்குளம் போஸ்டு, திருச்சினாப்பள்ளி.

என்ற விலாசத்திற்கு எழுதவும்.

# வக்கீல்

187702

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

மலர் 2 டிசம்பர் 1950 இதழ் 12

# குறிப்புகள்.

## வெல்லத்தின் வெற்றி!

சமீபத்தில் வெல்லத்திற்கும் மத்திய சர்க்காருக்கும் நடந்த ஒரு குஸ்தியில் வெற்றி பெற்றது வெல்லமென்றே சொல்லவேண்டும். ஏனென்றால் உண்மை வெல்லம் குஸ்தி மேடைக்கே வரவில்லை. 'வெல்லம்' என்ற பெயருடன், களிமண் போன்ற ஒரு சரக்கையே சர்க்காருடன் சண்டையிட ஏவிவிட்டு, உண்மை வெல்லம் உள்ளிலிருந்தே புன்சிரிப்புடன் வேடிக்கை பார்த்து வருகின்றது. கூச்சலிடுவோருக்கு 'க்யூ' தண்டனை விதிக்கப்பட்டு, இக்களிமண் சரக்கே ஆடம்பரமாய் ரேஷன் முறையில் விநியோகிக்கப்பட்டு வருகிறது. "இச்சர்க்கார் நமக்குச் சம பலமுள்ளதல்ல. ஆகையால் அதனுடன் சண்டையிட நாமே நேரில் போக வேண்டிய அவசியமில்லை" என்ற பாவனையில் உண்மை வெல்லம் ஒதுங்கியது போலும்!

சர்க்கார் ஊழியர்கள் மீது குறை சொல்வதற்குமில்லை. அவர்கள் மனப்பூர்வமாய்ப் பொதுமக்களுக்கு இச்சமயத்தில் உதவி செய்ய வேண்டுமென்றேதான் யுக்தியாக நடவடிக்கைகள் எடுத்தனர். ஆனால் பிரயோஜனப்படவில்லை. அவர்களிடம் மத்திய சர்க்காரால் இச்சண்டைக்காகக் கொடுக்கப்பட்ட ஆயுதங்கள் போதவில்லை. முன்பே பழக்கப்பட்ட ஆயுதங்கள் கூர் மழுங்கியவை. துருப்பிடித்தவை. அந்த ஆயுதங்களை உபயோகப்படுத்துவோரும் பழக்கப்பட்டவர்கள். சண்டை விளையாட்டுச் சண்டையாகவே முடிந்தது! வெல்லத்தின் வெற்றி சர்க்காரின் தோல்வியே ஆகும்!

சிற்சில இடங்களில் நல்ல உண்மையான வெல்லம் கூட்டுறவுச் சங்கங்களால் கண்ட்ரோல் விலைக்கு விநியோகம் செய்யப்பட்டதென்று பத்திரிகைகள் தெரிவிக்கின்றன. இச்சந்தர்ப்பத்தில் சர்க்கார் வேறு ஒரு புள்ளி விபரத்தையும் உடனே பொதுமக்களுக்குத் தெரிவிப்பது ஒரு கடமையாகும். அதாவது கண்ட்ரோலுக்கு முன் நல்ல வெல்லத்தின் சராசரி உற்பத்தியும் ஸ்டாக்கும் எவ்வளவு? கண்ட்ரோலுக்குப்பின் சர்க்காரிடம் 'ஸ்டாக்' கணக்கு வந்தது எவ்வளவு? பாக்கி எங்கே? என்ற புள்ளி விபரம் தெரிந்தால் அதைக் கொண்டாவது பொதுமக்கள் ஓர் ஆறுதல் அடையலாம்!

## "வக்கீல்" புதிய அம்சங்கள்

1951 ஜனவரி மாத இதழ் முதல் "வக்கீல்" பத்திரிகையில் "தொழிலாளர் பகுதி" என்றும் "புகார்ப்பெட்டி" என்றும் இரண்டு பகுதிகள் சேர்க்கப்படும். இவை பற்றிய விவரங்கள் "அடுத்துவரும் இதழ்களில்" என்ற தலைப்பின் கீழ் அட்டைப் பக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்பகுதிகள் நேயர்களுக்கு மிக உபயோகமுள்ளவையாக இருக்குமென்று நம்புகிறோம். இவை பற்றி நேயர்களின் அபிப்பிராயங்களையும் வரவேற்கிறோம்.

# புதிய சட்டங்கள்

**சுருக்கியும்–வரிசையாகவும்**

## 1950-ஆம் வருடத்திய (சென்னை) சட்டங்கள்

[சென்னை-சட்ட மன்றத்தால் நிறைவேற்றப் பட்டவை. பிராக்கெட்டில் கொடுக்கப் பட்டிருக்கும் தேதி அச்சட்டம் சென்னைச் சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்ட தேதி. இதற்கு முன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப் பட்டன.]

### 23 ஆவது (சென்னை) சட்டம்

(25-10-1950) (The Madras District Municipalities Amendment Act, 1950) இதன் மூலம், புதிய அரசியல் அமைப்புக் கிணங்க, முனிசிபாலிட்டிகளைக் குறித்த சென்னைச் சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு முனிசிபாலிட்டிக்கும் கீழ்க்கண்ட வகுப்புகளைச் சேர்ந்தவர்களுக் கென்று சில ஸ்தானங்களை ஒதுக்க, சென்னைச் சர்க்காருக்கு செக்ஷன் 7 (3) ன்படி அதிகாரம் இருந்தது. அதாவது (1) முஸ்லீம்கள் (2) இந்திய கிறிஸ்தியர்கள் (3) ஜாபிதாவில் கண்ட ஜாதியார்கள் (ஷெட்யூல்ட் வகுப்பினர்) (4) ஐரோப்பியர்கள் (5) ஆங்கிலோ-இந்தியர்கள் (6) ஸ்திரீகள் - இவர்களுக்குத் தனி ஸ்தானங்களை ஒதுக்க, சர்க்காருக்கு இருந்த அதிகாரம் இப்பொழுது எடுக்கப்பட்டு விட்டது. திருத்தச் சட்டப்படி (1) ஜாபிதாவில் கண்ட ஜாதியார்கள் (ஷெட்யூல்ட் வகுப்பினர்) (2) ஆங்கிலோ இந்தியர்கள் (3) ஸ்திரீகள் - இவர்களுக்கு மட்டில் தான் சில ஸ்தானங்களை, சர்க்கார் ஒதுக்கலாம். ஆனால் கடைசியில் எடுத்த ஜன கணிதப்படி, ஒரு முனிசிபாலிட்டியில் 100-க்கு 50-க்கு மேற்பட்டவர்கள் ஹரிஜனங்கள் முதலிய ஷெட்யூல்ட் வகுப்பினராகவோ, ஆங்கிலோ - இந்தியர்களாகவோ இருந்தால், இவர்களுக்கு அந்த முனிசிபாலிட்டியில் ஸ்தானங்கள் ஒன்றும் தனியாக ஒதுக்கப்பட மாட்டா. இந்தத் திருத்தம் இப்பொழுது இருக்கும் முனிசிபல் கவுன்சில்களின் அமைப்பைப் பாதிக்காது. இனி நடக்கும் தேர்தல்கள் இத்திருத்தச் சட்டத்தை அனுசரித்து நடத்தப்படும். மேலும் இத்திருத்தச் சட்டப்படி இப்பொழுது இருக்கும் முனிசிபல் கவுன்சில்களின் ஆயுளை இஷ்டப்படி நீடிக்கச் சென்னைச் சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரத்தை உபயோகித்து ஒரு முனிசிபல் கவுன்சிலின் ஆயுளைச் சர்க்கார் நீடித்தாலும், அதை ரத்து செய்து அதற்கு முன்பே அதைக் கலைக்கவும் அல்லது அத் தேதியை இன்னும் நீடிக்கவும், சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது.


### 24 ஆவது (சென்னை) சட்டம்

(31-10-1950) (The Madras Agriculturists Amendment Act, 1950) சென்னை விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டத்தில் ஒத்தி அல்லது போக்கியம் சம்பந்தமான சில முக்கிய திருத்தங்களும் மாறுதல்களும் மறுபடியும் செய்யப் பட்டிருக்கின்றன. இச்சட்டம் இந்த இதழில் வேறு பகுதியில் விவரமாய் விளக்கப் பட்டிருக்கிறது.

### 25 ஆவது (சென்னை) சட்டம்

(31-10-1950) (The Madras Stamp Second Amendment Act, 1950.) அடமானங்கள் சம்பந்தப்பட்ட வரையில் சென்னை ஸ்டாம்பு சட்டம் திருத்தப் பட்டிருக்கிறது. அதாவது அடமானங்கள் இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. சொத்தை அடமானம் வைத்துக் கடன் வாங்குபவர் அச்சொத்தையோ அதன் ஒரு பாகத்தையோ, கடன் கொடுப்பவரின் சுவாதீனத்தில் விட்டு விட்டாலும், விட்டு விடுவதாக ஒப்புக் கொண்டாலும், (அதாவது ஒத்தி அல்லது போக்கியங்களுக்கு) கிரய சாசனங்களைப்போலவே கடன் தொகைக்கு ஸ்டாம்பு வேண்டும். உதாரணமாக: ரூ. 100 போக்கியம் அல்லது ஒத்திக்கு, (சர்சார்ஜ் தவிர) ரூ. 3 ஸ்டாம்பு வேண்டும். ஆனால் சுவாதீனம் கொடுக்கப்படாத பெந்தகம் அல்லது அடமானங்களுக்கு அதில் பாதி ஸ்டாம்பு போதும். ஆனால் சொத்தை அடமானம் வைத்துக் கடன் வாங்குபவர், ஒத்தி அல்லது போக்கியமாக அப்பத்திரத்தை எழுதிக் கொடுக்காமல், சாதாரண அடமானமாக எழுதி, அப்பொழுதே

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம்)



# புதிய சட்டங்கள்

—பொறுக்கியும்–விவரமாயும்—

# சென்னை விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டத்தில் மறுபடியும் திருத்தம்.

**"ஒத்தி" பற்றிய புது ஷரத்துக்கள். "புதுப் பித்தல்" என்றால் என்ன?**

[1950 ஆம் வருடத்திய 24 ஆவது (சென்னை) சட்டம். Madras Act No. 24 of 1950. The Madras Agriculturists Relief (Amendment) Act, 1950. சென்னைச் சட்ட மன்றத்தால் நிறைவேற்றப் பட்டு 18-10-1950ல் ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரம் பெற்றது. 31-10-1950 தேதியுள்ள சென்னைச் சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. அமுலுக்கு வந்ததேதி : 31-10-1950.]

சென்னை விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம் 1938ல் அமுலுக்கு வந்தது. ஆனால் அதன் பிறகு அச்சட்டத்தில் பல திருத்தங்களும் மாறுதல்களும் ஏற்படுத்தப்பட்டன. முதலில் பரிகாரம் அடைய லாயக்கில்லாத பலர் இத்திருத்தச் சட்டங்களால் அனுகூல மடைந் தனர். முக்கியமாக முதல் முதல் விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம் அமுலுக்கு வந்த போது, தங்கள் சொத்துக்களை "ஒத்தி" அல்லது "போக்கியம்" வைத்துக் கடன் வாங்கிய விவசாயிகளுக்கு அச்சட்டத்தால் யாதொரு பரிகாரமும் அளிக்கப் படவில்லை. ஆனால் 1948ல் ஏற்பட்ட ஒரு திருத்தத்தால் ஒத்தி அல்லது போக்கியம் வைத்துக் கடன் வாங்கிய விவசாயிகளுக்கு எதிர்பாராத அளவு பரிகாரம் அளிக்கப்பட்டது. 30 வருடங்கள் வட்டிக்கு ஈடாக ஒத்திச் சொத்துக்களை அனுபவித்த ஒத்திதார், அசல் தொகையையே இழந்தார்; இவர்கள் யாதொரு தொகையும் வாங்கிக் கொள்ளாமலே ஒத்திச் சொத்தை சுவான் தாருக்குத் திருப்பிக் கொடுக்கும்படி சட்டம் மாற்றப்பட்டது. 30 வருடங்களுக்குக் குறைவாக ஒத்திச் சொத்தை அனுபவித்து வரும் ஒத்திதார்களும் ஒவ்வொரு வருடமும் அசல் தொகையில் 30ல் 1 பங்கை இழந்து கொண்டே வருகின்றனர். சில விதி விலக்குகள் இருந்தாலும், இதுதான் பொதுவான விதி. இவ்விதம் விவசாயிகளின் ஒத்திக் கடன் களுக்குப் பரிகாரம் அளிக்கப் புதிய ஷரத்துக்கள் அடங்கிய செக்ஷன் 9A என்ற பிரிவு 1948ல், பழைய சட்டத்தில் சேர்க்கப்பட்டது. புதிதாகச் சேர்க்கப்பட்ட இந்த ஷரத்துக்களில் நடை முறையில் காணப்பட்ட சில குறைபாடுகளை நிவர்த்தி செய்யவும், சில சந்தேக மூண்டாக்கக் கூடிய வாசகங்களை விளக்கும்படி திருத்தவும் இப்பொழுது ஒத்தி சம்பந்தமான செக்ஷன் 9A என்பது அடியோடு மாற்றப்பட்டுப் புதிதாக அமைக்கப்பட் டிருக்கிறது. புதிய செக்ஷன் 9Aல் 11 பிரிவுகள் இருக்கின்றன. அவைகளை அதே வரிசையில் கவனிப்போம்.

**செக்ஷன் 9A (1) எவ்விதமான ஒத்தி அல்லது அடமானங்களுக்கு இச் சட்டம்:**

30-9-1947க்கு முன் எழுதிக் கொடுக்கப்பட்ட ஒத்தி அல்லது சுவாதீன அடமானங்களுக்குத் தான் கீழே கண்ட ஷரத்துக்கள் பரிகார மளிக்கும். மேலும் பத்திர ஷரத்தை அனு சரித்து ஒத்திச் சொத்துக்கள் ஜாடாவுமோ, அல்லது அடமான சொத்துக்களின் ஒரு பாகமோ, ஒத்திதாரின் சுவாதீனத்தில் இருக்க வேண்டும். இவ்வித ஒத்திப் பத்திரங்களில் யாதொரு வட்டி விகிதமும் காணாமல் இருக்

தாலும் சரி; அல்லது ஒத்திச் சொத்துக்களின் வரும்படியை ஒத்திதார் அடையவேண்டு மென்பது தவிர, அதற்குமேல் அதிகமாக ஒரு வட்டி விகிதமும் அவருக்குக் கடனாளியால் கொடுத்து வரவேண்டுமென்ற ஒப்பந்தம் இருந்தாலும் சரி; இந்த இரண்டு வகை ஒத்திகளுக்கும் இத்திருத்தச் சட்டம் பரிகாரமளிக்கும். (இவ்விதம் திருத்தப்படுவதற்கு முன்னால், வட்டி விகிதம் காணாத ஒத்திகளுக்கும், ஜாடா ஒத்திச் சொத்துக்களும் ஒத்திதார் சுவாதீனத்திலுள்ள ஒத்திகளுக்கும் தான் அச்சட்டம் உபயோகமாக இருந்தது. இப்பொழுது அடமான சொத்துக்களின் ஒரு பாகம் மட்டில் ஒத்திதார் சுவாதீனத்திலிருந்தாலும், ஒத்திச் சொத்தின் வரும்படிக்கு மேல் ஒரு ரொக்க வட்டியும் கொடுக்கவேண்டு மென்று எழுதப்படும் அடமானங்களுக்கும் இத் திருத்தச் சட்டம் பரிகாரம் அளிக்கின்றது.)

ஒத்திச் சொத்துக்களையோ அல்லது அதன் ஒரு பாகத்தையோ ஒத்திதார், கடன் வாங்கியவருக்கோ வேறு ஒருவருக்கோ குத்தகைக்கு விட்டிருந்தாலும், அச் சொத்துக்கள் ஒத்திதார் சுவாதீனத்தில் இருப்பதாகவேதான் பாவிக்கப்படும்.

**(2) கெடுவுக்கு முன்பே மீட்கலாம்:—**

ஒத்திப் பத்திரத்தில், ஒத்தியை மீட்க ஏதாவது கெடு கண்டிருந்த போதிலும், அதற்கு முன்பே ஒத்தியை மீட்கச் சுவான்தாருக்குப் பாத்தியமுண்டு. (அப்படி கெடுவுக்கு முன்பே மீட்க எவ்வளவு தொகை கொடுக்க வேண்டுமென்றும், அல்லது ஏதாவது தொகை கொடுக்கவேண்டுமா என்றும் கீழே கண்ட மற்ற விதிகள் கூறுகின்றன.)

**(3) ஜாடா ஒத்திச் சொத்துக்களும் ஒத்திதார் சுவாதீனத்தில் 30 வருடங்களுக்குக் குறைவாக இருந்தால் ஒத்தியை மீட்க எவ்வளவு தொகை கொடுக்க வேண்டும்:—** ஒத்திதார் ஒத்திச் சொத்துக்கள் ஜாடாவையும் 30 வருடங்களுக்குக் குறைவாகவே அனுபவித்திருந்தால், ஒத்தியின் அசல் தொகையில் வருடம் 1க்கு 30ல் ஒரு பங்கு வீதம் கழிவு ஏற்பட்டுக்கொண்டே வரும். இவ்விதம் ஏற்படும் கழிவுத் தொகை போக, பாக்கி அசல் தொகையை மட்டில் கொடுத்து ஒத்திச் சொத்தை மீட்கலாம். இது சாதாரண ஒத்திப் பத்திரங்களுக்கு. ஆனால் கடன் கொடுத்தவர் ஒத்திச் சொத்துக்களின் வரும்படியை அடைந்து வருவது தவிர, அவருக்கு அதிகப்படியாக ஒரு ரொக்க வட்டியும் கடன் வாங்கியவர் கொடுத்து வரவேண்டுமென்று வட்டி விகித ஷரத்துடன் ஏற்பட்ட ஒத்திகளை மீட்க, முன் கண்டபடி கழிவுத்தொகை போக, பாக்கி அசல் தொகையும், அதிகப்படியாக கடன்காரர் தரவேண்டிய வட்டித் தொகையும் சேர்த்துக் கொடுத்தால்தான் ஒத்தி சொத்துக்களை மீட்கலாம். ஆனால் இவ்விதம் அதிகமாகக் கொடுக்க வேண்டிய வட்டித் தொகையை விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டத்தின் மற்ற ஷரத்துக்களை அநுசரித்து (அதாவது செக்ஷன் 8, 9, 12, 13 இவைகளின்படி) எவ்வளவு வட்டி கொடுத்தால் போதுமோ அவ்வளவு சேர்த்துக் கொடுத்தால் போதும். மேலும் ஒத்தி வைத்தவர் அந்த முறைமையில் ஒத்திதாருக்கு வேறு ஏதாவது தொகைகள் சட்டப்படி கொடுக்க வேண்டியிருந்தால் அதையும் அதற்கு வட்டி உண்டானால், அவ்வட்டியையும் சேர்த்து ஒத்திதாரிடம் கொடுத்தால்தான் ஒத்திச் சொத்துக்களை மீட்க முடியும்.

**(4) ஒத்திச் சொத்துக்களில் ஒரு பாகம் மட்டில் ஒத்திதார் சுவாதீனத்தில், 30 வருடங்களுக்குக் குறைவாக இருந்தால், ஒத்தியை மீட்க எவ்வளவு தொகை கொடுக்கவேண்டும்:—** ஒத்திச் சொத்துக்கள் ஜாடாவும் ஒத்திதார் சுவாதீனத்தில் இல்லாமல், அதன் ஒரு பாகம் மட்டில் ஒத்திதாருடைய சுவாதீனத்தில் இருந்தால், அவருடைய சுவாதீனத்திலிருக்கும் சொத்துக்களுக்கான வீதாசார அசல் தொகை என்னவென்று முதலில் நிர்ணயம் செய்து கொள்ளவேண்டும். [இதை எப்படி கணக்குச் செய்வது என்பதைப் பற்றிச் சர்க்காரால் விதிகள் செய்யப்படும். அவ்விதிகளை அனுசரித்து ஒத்திதார் சுவாதீனத்திலிருக்கும் சொத்

துக்களுக்கான வீதாசார அசல் தொகையை நிர்ணயம் செய்யவேண்டும்.] இவ்வித வீதாசார அசல் தொகையில் மட்டில் தான், ஒத்திதார் சுவாதீனத்திலிருந்த ஒவ்வொரு வருடத்திலும் 30ல் 1 பங்கு விகிதம் அசல் கழிவு ஏற்பட்டுக்கொண்டு வரும். ஒத்திதார் அனுபவிக்காத சொத்துக்களுக்கான வீதாசார அசல் தொகையில் யாதொரு கழிவும் ஏற்படாது. கழிவு ஏற்பட்ட வீதாசார அசல் தொகை பாக்கியும், கழிவு ஏற்படாத வீதாசார அசல் தொகை ஜாடாவையும் சேர்த்துக் கொடுத்தால்தான் இவ்வித ஒத்திகளை மீட்கலாம். ஆனால் ஒத்திதார் சுவாதீனத்தில் இல்லாத சொத்துக்களுக்கான வீதாசார அசல் தொகையை, விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டத்தின் மற்ற ஷரத்துக்களின்படி கணக்குச் செய்து (அதாவது செக்ஷன் 8, 9, 12, 13-ன்படி) கொடுத்தால் போதும். மேலும் ஒத்திச் சொத்தின் வரும்படி தவிர, மேற்கொண்டு அதிகப்படியாக ஒரு ரொக்க வட்டியும் கொடுக்கவேண்டு மென்று கண்டு ஏற்படும் ஒத்திகளை மீட்க அந்த அதிகப்படியான வட்டித் தொகைகளையும் (இச் சட்டத்தின் மேற்சொன்ன மற்ற ஷரத்துக்களின்படி கணக்குச் செய்து) சேர்த்துக் கொடுக்கவேண்டும். தவிர ஒத்திதாருக்குக் கடன் வாங்கியவர் அந்த முறையில் ஏதாவது வேறு தொகைகள் சட்டப்படி கொடுக்கவேண்டி யிருந்தாலும் அவைகளையும் சேர்த்துக் கொடுத்தால்தான் ஒத்தியை மீட்க முடியும்.

**(5) ஜாடா ஒத்திச் சொத்துக்களும் ஒத்திதார் சுவாதீனத்தில் 30 வருடங்கள் இருந்து விட்டால்:**—ஒத்திச் சொத்துக்களின் வரும்படி தவிர வேறு ஒன்றும் அதிகப்படியாக வட்டி கொடுக்க வேண்டுமென்று எழுதப்படாத ஒத்திப் பத்திரங்களில் கண்ட எல்லாச் சொத்துக்களையும் ஒத்திதார் 30 வருடங்கள் அனுபவித்து விட்டால் ஜாடா அசல் தொகையும் ரத்தாகி விடும். அதன் பிறகு யாதொரு தொகையும் கொடுக்காமலே சுவான்தார் ஒத்திச் சொத்துக்களை மீட்க முடியும். இந்த 30 வருடக் கெடுவானது 1948 ஆம் வருடத் திருத்தச் சட்டம் அமுலுக்கு வந்த தேதியாகிய 25-1-1949-க்கு முன்பே முடிந்திருந்தால் அச்சட்டம் வந்த 25-1-1949 தினம் ஜாடா அசலும் ரத்தாகி விட்டது. ஆனால் ஜாடா ஒத்திச் சொத்துக்களின் வரும்படியைத் தவிர, அதற்குமேல் ஒரு ரொக்க வட்டியும் கடனாளி கொடுக்கவேண்டுமென்று ஷரத்துக் கண்டு எழுதப்பட்டிருக்கும் ஒத்திகளுக்கு மட்டில், இவ்விதம் ஒப்புக்கொள்ளப்பட்ட அதிகவட்டியை ஒத்திதாருக்குக் கொடுக்கவேண்டும். இந்த அதிக வட்டியை விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டத்தின் முன் சொல்லப்பட்ட மற்ற ஷரத்துக்களின்படி கணக்குச் செய்து கொடுத்தால் போதும். மேலும் ஒத்திதாருக்கு அம்முறைமையில் சட்டப்படி வேறு ஏதாவது தொகைகள் கொடுக்க வேண்டியிருந்தால் அவைகளையும் கொடுத்துவிட வேண்டும். இவ்விரண்டு தொகைகளும் கொடுக்கப்பட்டு விட்டால் ஒத்தி ஜாடாவாகத் தீர்ந்து விடும். சொத்தைச் சுவான்தாரர் மீட்டுக் கொள்ளலாம்.

**(6) ஒத்திச் சொத்துக்களின் ஓர் பாகம் மட்டில் ஒத்திதார் சுவாதீனத்தில் 30-வருடங்கள் இருந்து விட்டால்:**—ஒத்திதார் சுவாதீனத்தில் இருக்கும் சொத்துக்களுக்கான வீதாசார அசல் தொகை எவ்வளவு என்று முன் சொன்னபடி நிர்ணயம் செய்ய வேண்டும். ஒத்தி அசல் தொகையின் இப்படி நிர்ணயம் செய்யப்பட்ட பாகம் மட்டில் ஜாடாவாக ரத்தாகி விடும். ரத்தாகாத அசல் பாக்கியைக் கொடுத்துத்தான் இவ்வித ஒத்திகளை மீட்க முடியும். அத்துடன் வரும்படியைத் தவிர ஏதாவது அதிகப்படியாக ரொக்க வட்டி கொடுக்க வேண்டுமென்று ஒப்புக்கொள்ளப் பட்டிருந்தால் இந்த அதிக வட்டியையும் சேர்த்துக் கொடுக்க வேண்டும். ஆனால் மேலே சொன்ன இரண்டு தொகைகளையும் விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டத்தின் முன் சொல்லப்பட்ட மற்ற ஷரத்துக்களின்படி கணக்குச் செய்து கொடுத்தால் போதும். மேலும் ஒத்திதாருக்கு அம்முறைமையில் சட்டப்படி ஏதாவது தொகைகள் கொடுக்க வேண்டியிருந்தால் அதையும் வட்டியுடன் சேர்த்துக் கொடுக்கவேண்டும். இவ்விதம் செய்தால்தான் இந்த ஒத்திகளை மீட்கலாம்.

**(7) வீதாசார அசல் தொகையை எப்படி நிர்ணயம் செய்வது?**

ஒத்திச் சொத்துக்களின் ஓர் பாகம் மட்டில் ஒத்திதாரின் சுவாதீனத்திலிருந்தாலும், அவ்வித ஒத்திகளுக்கும் இப்புதுத் திருத்தச் சட்டத்தால் பரிகாரமளிக்கப் படுகின்றது. ஆனல் அப்பொழுது விவசாயி அடையும் பரிகாரமும் குறைந்து போகும். ஒத்திச் சொத்துக்களில் எவ்வளவு பாகம் ஒத்திதாரின் சுவாதீனத்திலிருக்கிறதோ, அதே வீதாசாரத்தில் கணக்குச் செய்து அசல் தொகையில் அதே பாகத்திற்குத்தான் பரிகாரம் அளிக்கப்படும். ஒத்திதார் சுவாதீனத்திலிருக்கும் ஒத்திச் சொத்துக்களுக்கான வீதாசார அசல் தொகை எவ்வளவு என்று நிர்ணயம் செய்ய, சர்க்கார் விதிகள் ஏற்படுத்துவார்கள். அதைத் தழுவி இந்த வீதாசார அசல் தொகை நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

**(8) ஒத்திச் சொத்துக்களை அபிவிருத்தி செய்த செலவுகளையும் ஒத்திதாருக்குக் கொடுக்க வேண்டும்:**—ஒத்திப் பத்திரத்தில் கண்ட கெடுவுக்கு முன்பே இச்சட்டத்தால் கொடுக்கப்படும் உரிமையை உபயோகித்து, சுவான்தாரர் ஒத்தியை மீட்டுக் கொண்டாலும்; அல்லது 30 வருட அனுபவத்தால் ஒத்தித் தொகை ஜாடாவும் ரத்தான பிறகு சுவான்தாரர் ஒத்தியை மீட்டுக் கொண்டாலும், ஒத்திச் சொத்துக்களை அபிவிருத்தி செய்வதற்காக ஒத்திதார் செலவழித்த தொகைகளையும் (Costs of improvement) சேர்த்துக் கொடுத்தால் தான் மேற்கண்ட ஒத்திகளை மீட்க முடியும்.

**(9) ஒத்தி வைத்தவருக்கே ஒத்திச் சொத்துக்கள் குத்தகைக்கு விடப்பட்டிருந்தால்:**—ஒத்தி ஏற்பட்டு 30 வருடங்கள் ஆகாமலிருந்து, ஒத்திச் சொத்துக்கள் பூராவுமோ அல்லது ஒத்திதார் வசமுள்ள ஓர் பாகமோ ஒத்தி வைத்தவருக்கே திரும்பக் குத்தகைக்கு விடப்பட்டிருந்தாலும், ஒத்தி ஏற்பட்டு 30 வருடங்கள் ஆகிவிட்டாலும் ஒத்திதார் வசம் ஒத்திச் சொத்துக்களின் ஓர் பாகம் மட்டிலிருந்து அதைத் திரும்ப ஒத்தி வைத்தவருக்கே குத்தகைக்கு விடப்பட்டிருந்தாலும் இதற்குச் சட்டம் வேறு. அவ்விதமிருந்தால் ஒத்தி வைத்தவர் கொடுக்கவேண்டிய குத்தகை அல்லது பகுதித் தொகையே அசல் தொகையின் (அல்லது வீதாசார அசல் தொகையின்) வட்டியாக பாவிக்கப்படும். ஒத்திச் சொத்துக்களுக்கு ஒத்திதார் கொடுக்க வேண்டிய கிஸ்தி வரி, செஸ் முதலியவற்றைக் குத்தகைத் தொகையில் முதலில் கழித்துக் கொண்டு பாக்கி இருக்கும் குத்தகைத் தொகைதான் மேலே சொன்னபடி 'வட்டி' யாகப் பாவிக்கப்படும். ஒத்தியாக அல்லாமல் சாதாரணமாக வட்டி போட்டு எழுதப்படும் கடன் தொகைகளின் அசல் வட்டியை விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டத்தின் மற்ற ஷரத்துக்களின் படி எவ்விதம் கணக்குச் செய்ய வேண்டுமோ (அதாவது 8, 9, 12, 13 செக்ஷன்களின்படி) அப்படி கணக்குச் செய்து அத்தொகையை ஒத்திதாருக்குச் செலுத்தினுல் போதும்; ஒத்தியை மீட்கலாம். அதாவது இவர்கள் குத்தகைக்குப் பதிலாக சட்டப்படிக்கான குறைந்த வட்டி கொடுத்தால் போதும். அதற்கு மேல் உள்ள குத்தகைத் தொகை ரத்தாகி விடுகிறது. இவ்விதம் ஒத்தி வைத்தவரே ஒத்திச் சொத்துக்களைத் திரும்பக் குத்தகைக்கு வைத்துக் கொண்டிருந்தால் ஒத்தி அசல் தொகையில் வருடம் 1-க்கு 30-ல் 1-பங்கு கழிவு ஏற்படாது. இவர்களுக்கு வட்டி போட்டு எழுதப்பட்ட கடன்களுக்கு எவ்விதம் பரிகாரம் அளிக்கப்படுமோ அவ்விதமேதான் பரிகாரம் அளிக்கப்படும். இப்பொழுது ஏற்பட்டிருக்கும் திருத்தச் சட்டத்தில் இந்த இடம் தெளிவாக்கப் பட்டிருக்கிறது.

ஆனல் ஒத்தி ஏற்பட்டு 30 வருடங்கள் ஆகி, ஒத்திச் சொத்துக்கள் ஜாடாவும் ஒத்திதாரால் திரும்ப ஒத்தி வைத்தவருக்கே குத்தகைக்கு விடப்பட்டிருந்தால் ஒத்தியின் அசல் தொகை ரத்தாகிவிடும். ஆனல் ஒத்தி வைத்தவர் கொடுக்கவேண்டிய குத்தகை பாக்கிகளை மட்டில் (காலாவதி சட்டத்தால் பாதிக்கப் படாமலிருந்தால்) ஒத்திதார் வசூல் செய்து கொள்ளலாம்.

**(10) விதி விலக்குகள்:**—30-9-1947-க்கு முன் ஏற்பட்ட ஒத்திப் பத்திரங்களில் ஒத்தியை

மீட்க, கேடேக் கண்டிருந்தால், அக் கெடுவுக்கு முன்பே, அவ்வித ஒத்திகளையும் மீட்கலாம் என்று மேலே 1, 2 விதிகளில் சொல்லப் பட்டன. இவ்விரண்டு விதிகளைத் தவிர, செக்ஷன் 9 Aல் உள்ள மற்ற எந்த விதிகளும், (அதாவது ஒத்தி அசலில் வருடம் 1-க்கு 30 ல் 1-பங்கு கழிவு; 30 வருடத்தில் ஜாடா அசலும் ரத்து முதலிய விதிகள் எல்லாம்) கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் இடங்களிலும், சந்தர்ப் பங்களிலும் கிடையாது. அதாவது :—(i) தென் கன்னட ஜில்லாவிலோ, மலையாள ஜில்லாவில் சிராக்கல், கோட்டயம், குரும்பநாடு, வயநாடு தாலுக்காக்களிலோ உள்ள சொத்துக்களைப் பொறுத்து ஏற்படும் ஒத்திகளுக்கு மேற்கண்ட படி விதி விலக்கு உண்டு.

(ii) ஒத்திச் சொத்துக்கள் சென்னை ராஜ்யத்தில் வேறு எந்த இடத்தில் இருந்தாலும் கீழ்க்கண்ட சந்தர்ப்பங்களில் மேற்கண்டபடி விதி விலக்கு உண்டு. அதாவது :-(a) 30-9-1937க் குப் பின்பும் 30-1-1948க்கு முன்பும், ஒத்திச் சொத்துக்களின் சுவான் பாத்தியம் பூராவுமோ, ஒரு பாகமோ கடனாளியாலாவது, கடனாளி மூலம் பாத்தியம் கொண்டாடுபவராலாவது வேறு ஒருவருக்குப் பராதீனப் படுத்தப்பட்டிருந்தால், அப்படிப் பராதீனப் படுத்தப்பட்ட சொத்து சம்பந்தப்பட்ட வரையில், வீதாசாரமாக, ஒத்தித் தொகையில் அசல் ரத்து கழிவு முதலிய விதிகள் கிடையாது. (b) 30-9-1937க்குப் பின்பும் 30-1-1948க்கு முன்பும், ஒத்திப் பாத்தியம் பூராவையுமோ அல்லது அதன் ஓர் பாகத்தையோ, ஒத்திதார் அல்லது ஒத்தி பாத்தியத்தின் உரிமையாளர், உண்மையாகவும், சரியான பிரதிப் பிரயோஜனத்தின் பேரிலும், வேறு ஒருவருக்கு மாற்றி இருந்தால் (அதாவது ஒத்தி 'மேடோவர்' அல்லது 'டிரான்ஸ்வர்' செய்திருந்தால்) அப்படி மாற்றப்பட்டிருக்கும் சொத்துக்கு, பூராவுக்குமோ, வீதாசாரமாகவோ ஒத்தித் தொகையில் அசல் ரத்து கழிவு முதலிய விதிகள் இல்லை. ஆனால் ஒத்திப் பாத்தியத்தை மாற்றப் பெற்றவர் (அதாவது 'மேடோவர்' அல்லது 'டிரான்ஸ்வர்' பெற்றவர்) அதற்காக எவ்வளவு பிரதிப் பிரயோஜனம் கொடுத்தாரோ அதற்குமேல் அடைய முடியாது. மேலும், ஒத்திச் சொத்துக்கள் கடனாளியிடம் குத்தகைக்கு விடப்பட்டிருந்தால், ஒத்தி மேடோவர் பெற்றவர் பூரா குத்தகைத் தொகையையும் (காலாவதியாகாமலிருந்தால்) வசூல் செய்யலாம். (c) ஒத்திதார்கள் பலராக இருந்த அல்லது ஒத்திப் பாத்தியம் பல நபர்களிடம் (வாரசு முறைமையிலோ வேறு வகையிலோ) வந்து, இவர்கள் 30--9--1937க்குப் பின்பும் 30-1-1948க்கு முன்பும் தங்களுக்குள் பாகப் பிரிவினை செய்து கொண்டிருந்தால், அது சம்பந்தப்பட்ட ஒத்தித் தொகையில் அசல் ரத்து கழிவு முதலிய விதிகள் இல்லை.

(11) ஒத்திச்சொத்துக்களில் கடனாளிக்குள்ள சுவான் பாத்தியம் (Equity of redemption) பல நபர்களுக்குச் சொந்தமாக இருந்தோ, அல்லது அப் பாத்தியத்தைப் பலர் அடைந்தோ இருக்கும்போது, அவர்களில் ஒருவர் மட்டில் 30-9-1937-க்குப் பின்பும் 30-1-1948-க்கு முன்பும் ஒத்தித் தொகையை ஒத்திதாரிடம் கொடுத்து ஜாடா ஒத்திச் சொத்துக்களையும் மீட்டுக்கொண்டிருந்தால், அவர் ஒத்திக் கடனை கொடுக்கவேண்டிய மற்ற சுவான் பாத்தியதார்களிடம் வீதாசாரமாகத் தொகை வசூல் செய்யக் கூடிய பாத்தியம் இத்திருத்தச் சட்டத்தால் பாதிக்கப்படமாட்டாது. இவைதான் திருத்தி அமைக்கப்பட்ட ஒத்தி சம்பந்தமான புதிய விதிகள்.

## திருத்தச் சட்டத்தில் உள்ள மற்ற மாறுதல்கள்

'**புதுப்பித்தல்**' விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டப்படி பரிகாரம் அளிக்கப்பட வேண்டிய விவசாயிகளின் கடன்களை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். (1) 1-10-1932க்கு முன் வாங்கப்பட்ட கடன்கள் - செக்ஷன் 8 (2) 1-10-1932ல் அல்லது அதற்குப் பிறகு விவசாயிகள் கடன் நிவாரணச்சட்டம் அமுலுக்கு வந்த தேதியாகிய 22-3-1938க்கு முன் வாங்கப் பட்ட கடன்கள் - செக்ஷன் 9 (3) சட்டம் அமுலுக்கு வந்த 22-3-1938க்குப் பின் வாங்கப்பட்ட கடன்கள் - செக்ஷன் 13

(4) 30-9-1947க்கு முன் ஏற்பட்ட ஒத்தி அல்லது போக்கியம் (செக்ஷன் 9 A) -இவை ஒவ்வொரு வகைக் கடன்களுக்கும் விவசாயிகள் கடன் நிவாரணச் சட்ட விதிகள் வெவ்வேறு வகையான பரிகாரம் அளிக்கின்றன.

இவைகளில் முதல் இரண்டு வகைகளாக மேலே குறிப்பிடப்பட்ட கடன்கள், அதாவது 1-10-1932க்கு முன் ஏற்பட்ட கடன்களையும் அதற்குப் பிறகு 22-3-1938 க்கு முன் ஏற்பட்ட கடன்களையும கடன் கொடுக்கவேண்டியவர் புதுப்பித்து அசல் தொகையையும் வட்டித் தொகையையும் சேர்த்து, புது தஸ்தாவேஜுகள் எழுதிக்கொடுத்திருந்தால் இதற்கு 'புதுப்பித்தல்' (renewal) என்று பெயர். இவ்விதம் ஒரு கடன் பல தடவைகள் புதுப்பிக்கப் படலாம். இவ்விதம் புதுப்பிக்கப்படும தஸ்தவேஜுகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் 'அசல் தொகை' என்பது ஆரம்பத்தில் கடனாளி வாங்கிய அசல் தொகையுடன் வட்டி முதலியவைகளும் சேர்ந்திருக்கும். இவ்விதப் 'புதுப்பித்தல்' சம்பந்தமாய் 1948ல் இச்சட்டத்தில் ஒரு விளக்கம் சேர்க்கப்பட்டது. அதாவது: ஒரு கடன் ஏற்பட்ட பிறகு அதே கடனுக்கும் வட்டிக்கும் சேர்த்து கடனாளி ஒரு புதுத் தஸ்தவேஜு எழுதிக் கொடுத்திருந்தால், அதாவது கடனைப் புதுப்பித்திருந்தால், ஆரம்பத்திலும் அல்லது அதற்குப் பிறகும் எவ்வளவு தொகை அசல் கடனாகக் கொடுக்கப்பட்டதோ, அத்தொகை தான் 'அசல்' என்றும், மற்றவை எல்லாம் வட்டி என்றும் பாவிக்கப்பட்டு அதததற்கேற்ற பரிகாரம் அளிக்கப்பட வேண்டுமென்றும்; ஆரம்பத்தில் ஏற்பட்ட கடனைக் குறித்து அதே கடனாளியோ, வேறு ஒரு கடனாளியோ, அதைப் புதுப்பித்திருந்தாலும், புதுப்பிக்கப்படும் தஸ்தவேஜு ஆரம்பத்தில் கடன் கொடுத்தவர் பெயருக்கு ஏற்பட்டிருந்தாலும் வேறு ஒருவர் பெயருக்கு ஏற்பட்டிருந்தாலும் இவை எலலாம் 'புதுப்பிததல்' ஆகுமென்றும் 1948ல் சட்டத்தில் ஒரு விளக்கம் சேர்க்கப்பட்டது.

இவ்விளக்கத்தின் வாசகம் மிகப்பொதுவாக இருப்பதால் பலவகை இடையூறுகள் ஏற்பட்டன. உதாரணமாக, ஒருவரிடம் வாங்கிய கடனையும் அதன் வட்டியையும் அவருக்குத் திருப்பிக் கொடுப்பதற்காக அவருக்கு யாதொரு சம்பந்தமும் இல்லாத ஒரு மூன்றும் நபரிடம் கடனாளி கடன் வாங்கி அதற்கு ஒரு தஸ்தவேஜு எழுதிக் கொடுத்திருந்தால் கூட, இது 'புதுப்பித்தல்' என்று சொல்லக்கூடியதாக இருந்தது. அப்படியானால் புதிதாகக் கடன் கொடுத்தவர் ஏமாந்து போகக்கூடிய நிலைமை இருந்தது. சந்தேகம் விளைவிக்கக் கூடிய இவ்வாசகம் இப்பொழுது திருத்தி அமைக்கப்பட்டிருக்கின்றது. அதற்காக செக்ஷன் 8, 9 இவைகளில் இருந்த விளக்கத்தின் வாசகம் இப்பொழுது திருத்தப்பட்டிருக்கிறது. இனி, அதே கடன்காரருக்கோ (Creditor) அவர் வார்சுக்கோ, அவர் சார்பாக ஒருவருக்கோ, பழைய கடனைப் புதுப்பித்து, அதே கடனாளியாலோ (Debtor) அல்லது அவர் வார்சினாலோ, அல்லது அவர் சார்பாக ஒருவராலோ எழுதிக் கொடுக்கப்படும் தஸ்தவேஜுகள்தான் 'புதுப்பிக்கப்பட்டவை' ஆகும். ஆரம்பத்தில் வாங்கப்பட்ட கடனுக்குச் சம்பந்தமில்லாதவர்களுக்கு எழுதிக் கொடுக்கப்படும் தஸ்தவேஜுகள் 'புதுப்பித்தல்' ஆகா.

**துண்டித்தல்**:-ஒரு கடன் மேற்கண்டவிதம் அப்படியே அதன் அசல் வட்டித் தொகைக்கு வேறு ஒரே தஸ்தவேஜு மூலம் புதுப்பிக்கப் படாமல்பல தஸ்தவேஜுகள் மூலம் புதுப்பிக்கப் படலாம். உதாரணமாக: ஒரு கடனின் அசல் வட்டித் தொகையைக் கடன் கொடுத்தவரின் வார்சுகள் பாகம் செய்து கொண்டு ஒவ்வொரு பாகஸ்தரும் கடனாளியிடம் தம் பாகத்திற்குப் புது புது தஸ்தவேஜு எழுதி வாங்கலாம். அல்லது கடனாளியின் வார்சுகள் தாங்கள் கொடுக்க வேண்டிய அசல் வட்டித் தொகைகளை வீதம் செய்து கொண்டு ஒவ்வொருவரும் கடன் கொடுத்தவருக்குத் தம் தம் வீத அசல் வட்டித் தொகைக்கு தனித்தனியே தஸ்தவேஜுகள் எழுதிக் கொடுக்கலாம். இவ்விதம் ஒரு கடனின் அசல் வட்டித் தொகைகள் துண்டிக்கப்பட்டால் இது 'புதுப்பித்தல்' ஆகா என்று சென்னை ஹைகோர்ட்டார் ஒரு வழக்கில் தீர்ப்பளித்தனர். 'துண்டிக்கப்பட்ட' கடன்களுக்கு அந்த அந்த தஸ்தவேஜில் கண்டிருக்கும் தொகைகளே 'அசல்' தொகைகளாகும் என்று தீர்ப்பளிக்கப் பட்டது. அதற்காக இப்பொழுது சட்டத்தின் வாசகமே இந்த இடத்தில் திருத்தப்பட்டு விளக்கம் செய்யப்பட்டிருக்கிறது. இதன்படி, விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம் வருவதற்கு முன்போ, பின்போ ஒரு கடன் மேல் கண்ட விதம் துண்டிக்கப்பட்டு ஒவ்வொரு பாகத்திற்கும் ஒரு புதுத் தஸ்தவேஜு ஏற்பட்டிருந்தாலும் இவ்விதம் ஏற்படும் ஒவ்வொரு தஸ்தவேஜும் பழைய கடனின் அசல் வட்டிக்கு வீதாசாரமாய் 'புதுப்பித்த' தஸ்தவேஜாகப்

187702

பாவிக்கப்பட்டு அதற்கான பரிகாரம் அளிக்கப்படும்—என்று விளக்கப்பட்டிருக்கிறது.

## இத்திருத்தச் சட்டத்தால் பரிகாரம் அடைபவர்கள் யார்?

இப்பொழுது ஏற்பட்டிருக்கும் இந்தத் திருத்தச் சட்டத்தால் அனுகூலமடையும் விவசாயிகளின் சொத்து 25-4-1950 அல்லது அதற்குப் பின் கோர்ட் ஏலம் போயிருந்து இத்திருத்தச் சட்டம் அமுலுக்கு வந்த 31-10-1950 வரை அந்த ஏலம் உறுதி செய்யப்படாமலிருந்தாலும், அல்லது ஏலம் உறுதி செய்து 31-10-1950 தேதியில் 90 நாட்கள் ஆகாதிருந்தாலும், அவ்வித ஏலத்தை ரத்து செய்ய வேண்டுமென்று மனுப்போடலாம். இத் திருத்தச் சட்டம் அமுலுக்கு வந்த தேதியிலிருந்து 90 நாட்களுக்குள்ளோ, ஏலம் உறுதி செய்யப்பட்ட 90 நாட்களுக்குள்ளோ ஏலத்தை ரத்து செய்ய மனுப் போடவேண்டும். மேற் சொன்ன இரண்டு கெடுக்களில் எது பிந்தியோ அதுவரை மனுப்போடலாம். மனுச்செய்தவர் இத்திருத்தச் சட்டப்படி நிவாரணம் அடைய லாயக்குள்ளவர் என்று கோர்ட்டுக்குத் தோன்றினல் ஏலம் ரத்து செய்யப்படும். அதன் பிறகு இத்திருத்தச் சட்டப்படி டிக்ரித் தொகையைக் குறைக்க வேணடுமென்று சட்டப்படிக்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளலாம். இதன்படி ஏலம் ரத்து செய்யப்பட்டால், கோர்ட் ஏலம் எடுத்தவருக்கு அவர் கொடுத்த பணம் திரும்பக் கிடைக்கும்படி கோர்ட்டால் உத்தரவு செய்யப்படும். ஏலம் ரத்து செய்யப்பட்டால் அந்த உத்தரவின் பேரில் இரு கக்ஷிக்காரர்களுக்கும் அப்பீல் செய்ய உரிமை உண்டு.

இத் திருத்தச் சட்டம் அமுலுக்கு வந்த 31-10-1950-க்கு பிறகு ஆரம்பிக்கப்பட்ட தாவாக்களிலும் நடவடிக்கைகளிலும், அதற்கு முன்பே ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும், டிக்ரி அல்லது பைனல் டிக்ரி ஆகாத நடவடிக்கைகளிலும், டிக்ரி ஆகி இருந்தாலும் பூரா டிக்ரியும் நிறைவேற்றப்படாத நடவடிக்கைகளிலும், இத்திருத்தச் சட்டப்படி விவசாயிகளுக்குப் பரிகாரம் அளிக்கப்படும். ஆனல் கடன் கொடுத்தவர் சகஜமாகவோ கோர்ட் மூலமாகவோ இத்திருத்தச் சட்டம் அமுலுக்கு வரும் முன்பே வசூல் செய்த தொகைகளைத் திரும்பக் கொடுக்க வேண்டியதில்லை.

★

4-ஆ[illegible] பக்[illegible] 1950 [illegible]
(சென்னை) [illegible] தொடர்ச்சி

அச்சொத்துக்களைக் கடன் கொடுத்தவருக்கே குத்தகைக்குக் கொடுத்தாலும், அல்லது கடன் கொடுத்தவரே அச் சொத்துக்களின் வரும்படிகளை வசூல் செய்யும்படி அவருக்கு ஒரு பவர் பத்திரம் எழுதிக் கொடுத்தாலும் இதுவும் "போக்கியம் அல்லது ஒத்தி"யாகவே பாவிக்கப்பட்டு அதற்குள்ள அதிக ஸ்டாம்பு வேண்டுமென்று ஸ்டாம்பு ஆக்ட் ஆர்டிகிள் 33ல் ஒரு விளக்கம் ஏற்கனவேயே இருந்தது. கடன் வாங்குவதற்கு முன்பே, சொத்துக்களின் சுவாதீனம், கடன் கொடுப்பவருக்குக் குத்தகை அல்லது பவர் மூலமாகக் கொடுக்கப் பட்டிருந்தால் இவ்விதி பொருந்தாமல் இருந்தது. இப்பொழுது ஏற்பட்டிருக்கும் திருத்தப்படி, ஒருவர் கடன் வாங்கிச் சொத்தை அடமானம் வைக்கும் முன்பே, அச்சொத்துக்கள் கடன் கொடுப்பவரின் சுவாதீனத்தில் (குத்தகை அல்லது பவர் மூலமாக) விடப்பட்டிருந்தாலும், அச்சந்தர்ப்பங்களில் ஏற்படும் அடமானங்களும், ஒத்தி அல்லது போக்கியமாகவே பாவிக்கப்பட்டு, அதற்கான அதிக ஸ்டாம்பு வேண்டுமென்று, இப்பொழுது ஸ்டாம்பு சட்டம் விளக்கப் பட்டிருக்கிறது.

## 26 ஆவது (சென்னை) சட்டம்

(7-11-1950) (The Madras consolidated fund - charged Expenditure - Act, 1950) சென்னை ராஜ்யப் பொது நிதியிலிருந்து சில செலவுகளைச் செய்ய அனுமதிப்பது.

## 27 ஆவது (சென்னை) சட்டம்

(7-11-50) சென்னை ராஜ்யப் பொது நிதியிலிருந்து 1-4-50 முதல் ஆரம்பமாகும் நிதி வருடத்தில் இன்னும் அதிகமாக ரூ. 15,54,500 செலவு செய்ய சென்னை சர்க்காரை அனுமதிக்கும் சட்டம்.




இப்பகுதியில் நமது சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட்டுகள் முதலிய உயர் நீதி மன்றங்களின் நீதிபதிகளால் அளிக்கப்படும் தீர்ப்புகளின் முக்கிய அம்சங்களை ஒட்டி சட்ட விளக்கம் செய்யப்படும். சட்ட தத்துவங்களை விளக்கும் அன்னிய நாடு உயர் நீதிபதிகளின் அபிப்பிராயங்களையும் நேயர்கள் இங்கே வாசிக்கலாம்.

## இன்கம்டாக்ஸ் ஆபீசில் சோதனை போட்டு கள்ளமார்க்கெட்காரர்களின் தஸ்தவேஜுகளைக் கைப்பற்ற முயன்ற போலீஸ் சப் இன்ஸ்பெக்டர்.

கோர்ட் :—கிழக்குப்பஞ்சாப் ஹைகோர்ட்

நீதிபதிகள் :—பிரதமநீதிபதி வெஸ்டன்; நீதிபதிகள் கோசலா ஹரி நாம்சிங், கபூர், ஸோனி அவர்கள்.

ஆதாரம் :—1950 ஆல் இந்தியா ரிபோர்ட்டர், கிழக்குப் பஞ்சாப் - 306

ஜலந்தர் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் இரண்டு ஆசாமிகள்மீது, கள்ள மார்க்கெட் குற்றத்தைப் புலன் விசாரித்துக் கொண்டிருந்தார். இவ்விருவர்களும் தங்கள் வருமானத்தைப் பற்றி, ஜலந்தர் வருமானவரி அதிகாரிக்கு (இன்கம் டாக்ஸ் ஆபீசருக்கு) அனுப்பிய கணக்குகளையும் (ரிடர்ன்) வாக்குமூலங்களையும் பார்க்கவேண்டுமென்று இப்போலீஸ் அதிகாரி விரும்பினார். இன்கம்டாக்ஸ் ஆபீசருக்கு அப்போலீஸ் அதிகாரி ஒரு கடிதம் எழுதி மேற்கண்ட இரண்டு நபர்கள் சம்பந்தப்பட்ட வாக்குமூலங்களையும் ரிடர்ன்களையும் தம்மிடம் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டார். இவ்விதம் எவரிடம் இருக்கும் எந்த தஸ்தவேஜுகளையும் தாகல் செய்யும்படி கேட்க, குற்றங்களின் வழக்கு முறைச்சட்டத்தின் (Criminal procedure code) 94 ஆவதுபிரிவின்படி, புலன் விசாரிக்கும் எந்தப் போலீஸ் அதிகாரிக்கும் ஒரு உரிமை உண்டு. ஆனால் ஜலந்தர் இன்கம்டாக்ஸ் ஆபீசர் தம்மிடமிருக்கும் தஸ்தவேஜுகளைக் கொடுக்க முடியாதென்று மறுத்து விட்டார். இவ்விதம் அவர் மறுக்க, வருமான வரிச் சட்டத்தின் (Income Tax Act) 54 ஆவது பிரிவின்படி அவருக்கு உரிமை உண்டு.

போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் இதை அத்துடன் விட்டு விடவில்லை. கிரிமினல் வழக்கு முறைச் சட்டத்தின் வேறு ஒரு பிரிவைப் பிரயோகம் செய்தார். அச்சட்டத்தின் 96 ஆவது செக்ஷன்படி இக்கணக்குகளை இன்கம்டாக்ஸ் ஆபீசில் சோதனை போட்டு கைப்பற்றத் தமக்கு அதிகாரம் வேண்டுமென்று அவ்வூர் மாஜிஸ்ட்ரேட்டுக்கு மனுச்செய்து கொண்டார். மாஜிஸ்ட்ரேட்டும்மேற்கண்ட தஸ்தவேஜுகளைக் கைப்பற்ற "ஸர்ச் வாரண்ட்" பிறப்பித்தார். ஆனால் ஜலந்தர் இன்கம்டாக்ஸ் ஆபீசர் ஏமாந்தவரல்ல. மாஜிஸ்ட்ரேட் இவ்விதம் செய்த உத்தரவு தவறென்றும் அதை ரத்து செய்யும்படிக்கும் ஜலந்தர் செஷன்ஸ் ஜட்ஜுக்கு உடனே மனுச் செய்தார். இந்த மனுவை செஷன்ஸ் ஜட்ஜ் நிராகரித்தார். உடனே இன்கம்டாக்ஸ் ஆபீசர் கிழக்குப் பாஞ்சால ஹைகோர்ட்டுக்கு ரிவிஷன் மனுச்செய்தார். நல்லவேளையாக மாஜிஸ்ட்ரேட்டின் ஸர்ச் வாரண்ட் ஹைகோர்ட்டில் தீர்ப்பு ஏற்படும்வரை நிறைவேற்றப்படாமல் நிறுத்தி (Stay) வைக்கப்பட்டிருந்தது.

இனி கிழக்கு பஞ்சாப் ஹைகோர்ட்டுக்குப் போவோம். இவ்வழக்கை முதலில் விசாரணை

செய்வதற்காக ஆரம்பித்த இரண்டு உயர் நீதிபதிகள், இது மிகச் சிக்கலான சட்டப் பிரச்னை என்றும் பல நீதிபதிகள் அடங்கிய ஒரு நிறை மன்றத்தால் (Full bench) இச்சிக்கல் அலசப் படவேண்டுமென்றும் அபிப்பிராயப் பட்டனர். ஆகையால் ஐந்து உயர் நீதிபதிகள் கொண்ட ஒரு நிறைமன்றத்தால் இவ்வழக்கு விசாரிக்கப் பட்டது.

போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் எடுத்துக் கொண்ட நடவடிக்கை, அவர் ஆதாரமாகக் கொண்ட சட்டத்தை அனுசரித்தேதான் இருந்தது. இன்கம்டாக்ஸ் ஆபீசர் செய்ததும் அவர் ஆதாரமாகக் கொண்ட சட்டத்தைத் தழுவியேதான் செய்யப்பட்டது. இரண்டு சட்டங்களின் வாசகங்களும் தனித்தனியாகப் பார்த்தால் மிகத் தெளிவாகவே இருக்கின்றன. ஆனால் ஒன்றுக்கொன்று முரணாக இருக்கின்றன. இவ்விரண்டு சட்டங்களும் என்ன என்று கொஞ்சம் நுட்பமாகக் கவனிப்போம். இவை இரண்டில் எது வலுவுடையதென்றும் பார்ப்போம்.

குற்றவிசாரணைச் சட்டத்தின் 96 ஆவது செக்ஷன்படி எவ்விதமான இடங்களையும் எந்தப் போலீஸ் அதிகாரியும் சோதனை போட்டு எவ்வித தஸ்தவேஜு அல்லது சாமான்களையும் கைப்பற்றும்படி உத்தரவு (ஸர்ச்-வாரண்ட்) பிறப்பிக்க எந்த மாஜிஸ்ட்ரேட்டுக்கும் அச்சட்டப்படி உரிமை உண்டு. இச்சட்டத்தின் வாசகப்படி, ஒரு இன்கம்டாக்ஸ் ஆபீசைச் சோதனை போட்டு அதிலிருக்கும் தஸ்தவேஜுகளைக் கைப்பற்ற யாதொரு விதிவிலக்காவது தடையாவது இல்லை.

ஆனால் வருமான வரிச் சட்டத்தின் (இன்கம் டாக்ஸ் ஆக்ட்) 54 ஆவது செக்ஷனைக் கொஞ்சம் விரிவாகக் கவனிப்போம். இதன்படி வருமான வரி அதிகாரிகளிடமிருக்கும் ரிடர்ன்கள், கணக்குகள், வாக்குமூலங்கள், பிரமாணப் பத்திரிகைகள் முதலிய வரி விதிப்பு சம்பந்தமான எவ்வித தஸ்தவேஜுகளும், யாருடையதாக இருந்தாலும் அதில் அடங்கிய விஷயங்களை எல்லாம் வருமான வரி அதிகாரிகள் மிக மிக ரகசியமாக வைத்துக்கொள்ள வேண்டும். அத்துடனில்லை. எந்தக் கோர்ட்டும் வருமானவரி சம்பந்தமான ரிகார்டுகளையும் கணக்கு வழக்குகளையும் தாக்கல் செய்யும்படி எந்த அதிகாரிக்கும் சம்மன் செய்யவோ உத்தரவிடவோ கூடாது. (இதற்குச் சில விதிவிலக்குகள் இருக்கின்றன. அவை இவ்வழக்கில் ஏற்பட்ட பிரச்னைக்குச் சம்பந்தமில்லை.) மேலும் இந்த விதிக்கு மாறாக ஒரு இன்கம்டாக்ஸ் அதிகாரியோ, வேறு எந்த அதிகாரியோ, ஒருவருடைய வரி விதிப்புச் சம்பந்தமான தஸ்தவேஜுகளில் இருக்கும் விஷயங்களை வெளிப்படுத்தினால், அவ்வதிகாரிக்கு ஆறு மாதம் வரை சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படலாம்.

மிகக் கடுமையான விதி. ஆனால் ஏன் இவ்விதியை ஏற்படுத்தினார்கள் என்றுக் கவனித்தால், அது சரி என்றுதான் தோன்றும். எவரும் தம்முடைய உண்மையான வருமானம் எவ்வளவு என்று, யாதொரு பயமுமின்றி, வருமானவரி அதிகாரிக்குச் சொல்ல வேண்டுமென்றுதான் இவ்விதி ஏற்பட்டிருக்கிறது. உண்மை வருமானத்தைச் சொல்வதால், அதற்கான வரி கொடுக்க வேண்டியதைத் தவிர வேறு எவ்விதமான அபாயமும், அவ்விதம் உண்மை சொல்லுபவருக்கு நேர்ந்து விடாது. வருமான வரி அதிகாரிக்கு ஒருவர் கொடுக்கும் ரிடர்ன்களையும் வாக்குமூலங்களையும் ஆதாரமாகக் கொண்டு போலீசார் கேஸ் போடமுடியாது; வேறு ஒருவரும் தம் பாத்தியங்களை ஸ்தாபித்துக் கொண்டு விடமுடியாது. ஏனென்றால் வருமான வரி அதிகாரியிடமிருக்கும் இந்தத் தஸ்தவேஜுகளைத்தான் ஒருவரும் தெரிந்து கொள்ள முடியாதே; கோர்ட்டுகள் கூடச் சாதாரணமாய் இவைகளைத் தருவித்துப் பார்க்க முடியாதே. ஆகையால் வரி சம்பந்தமான விஷயங்கள் ரகசியமாக வைத்துக் கொள்ளப்பட வேண்டுமென்ற நோக்கத்துடன் இந்த விதி ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

மாஜிஸ்ட்ரேட்டின் 'ஸர்ச் வாரண்ட்'டின்படி சோதனைபோட்டுக் கைப்பற்றப்படும் தஸ்தவேஜு எப்படி ரகசியமாக இருக்கமுடியும்? சோதனைபோடவே போலீசார் அக்கம் பக்கத்திலுள்ள இரண்டு தகுந்த மனிதர்களை சாட்சிகளாக வைத்துக் கொள்ள வேண்டுமே!

சட்டங்கள் ஒன்றுக்கொன்று முரணாக இருந்தால் எதை அனுசரிப்பது என்பதைப்

பற்றிச் சில பொது விதிகள் இருக்கின்றன. இவைகளை உபயோகப்படுத்தி நீதிபதிகள் முடிவு செய்தனர். அவையாவன:—(1) பொதுவாக உள்ள ஒரு சட்டத்தின் விதியும், குறிப்பான ஒரு விஷயத்தைப் பற்றி உள்ள ஒரு சட்டத்தின் விதியும், ஒன்றுக் கொன்று விரோதமாக இருந்தால், குறிப்பான விஷயத்தைப்பற்றி உள்ள சட்ட விதிதான் அவ் விஷயத்தில் வலுவுள்ளது. கிரிமினல் வழக்கு முறைச் சட்டம் பொதுவானது; வருமான வரிச் சட்டம் வருமான வரி என்ற குறிப்பிட்ட விஷயத்தைப் பற்றியது. ஆகையால் வருமான வரிச்சட்ட விதிக்கு மாருக மற்றொன்று செல்லாது. (2) முன்பின்னாக இயற்றப்பட்ட சட்டங்கள் ஒன்றுக்கொன்று முரணாக இருந்தால் பிந்திய சட்டத்தின் நோக்கத்திற்கு மாருக உள்ள முந்திய சட்டவிதிகள் ரத்தானதாகவே பாவிக்கப்படும். கிரிமினல் வழக்கு முறைச் சட்டம் 1898ல் ஏற்பட்டது. வருமான வரிச் சட்டம் 1922ல் ஏற்பட்டது. வரி விஷயங்களை ரகசியமாக வைத்துக் கொள்ளவேண்டுமென்ற பிந்திய சட்டத்தில் உள்ள விதிக்கு மாருக முந்திய சட்ட விதிகள் செல்லா. (3) வருமான வரி சம்பந்தமான தஸ்தவேஜூக்களை (சாதாரணமாய்) எந்தக் கோர்ட்டும் சம்மன் கூட செய்யக்கூடாதென்று இருப்பதால், கோர்ட்டால் நேர் முகமாகச் செய்வதற்குத் தடை இருக்கும் ஒரு காரியத்தைப் போலீஸ் மூலம் செய்யவும் முடியாது. ஆகையால் இந்தத் தஸ்தவேஜூக்களைச் சோதனையின் பேரில் கைப்பற்றும்படி செய்த மாஜிஸ்ட்ரேட்டின் உத்தரவு வருமான வரிச் சட்டத்தால் தடை செய்யப்பட்டிருக்கிறது. (4) வருமான வரி ரிகார்டுகளை ரகசியமாக வைத்துக்கொள்ள வேண்டுமென்ற விதிக்குப் போலீசார் விதிவிலக்கு உள்ளவர்கள் அல்ல. ஒரு வருமான வரி அதிகாரி இந்த ரகசியங்களைப் போலீஸ் அதிகாரிக்குக்கூட வெளிப்படுத்தக் கூடாதென்றுதான் வருமான வரிச் சட்டத்தின் அர்த்தம். நேரடியாகத் தடை செய்யப்பட்ட விஷயத்தை மறை முகமாகச் செய்ய சட்டம் இடம் கொடுக்காது. சோதனை செய்தகூட இந்த ரிகார்டுகளில் இருக்கும் சங்கதிகளைப் போலீசார் தெரிந்து கொள்ளக் கூடாதென்று ஒரு தடை இருப்பதுபோல்தான், வருமான வரிச் சட்டம் அர்த்தம் செய்யப்படவேண்டும்.

ஆகையால் மாஜிஸ்ட்ரேட்டால் பிறப்பிக்கப்பட்ட 'ஸர்ச் வாரண்ட்' ஹைகோர்ட்டால் ரத்து செய்யப்பட்டது. போலீஸ் அதிகாரிக்கும் வருமான வரி அதிகாரிக்கும் நடந்த இந்த வழக்கில் வருமான வரி அதிகாரி ஜயித்தார். குற்றங்களின் வழக்கு முறைச் சட்ட விதியை விட வருமான வரிச் சட்ட விதி வலுவுள்ளதென்று உயர் நீதிபதிகளால் தீர்மானிக்கப்பட்டது.

ஆனல் ஆரம்பத்தில் கள்ளமார்க்கெட் கேசில் மாட்டிக்கொண்ட இருவர்கள் யார் யார் என்ருவது, அவர்களின் தாற்காலிக அதிர்ஷ்டம் நீடித்திருந்ததா என்ருவது இவ்வழக்கின் தீர்ப்பிலிருந்து நமக்குத் தெரியவில்லை. தெரிய வேண்டியதுமில்லை.

## கூட்டுறவுச் சங்கங்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளும் சிவில் கோர்ட்டின் அதிகாரமும்

**கோர்ட்:** சென்னை ஹைகோர்ட்

**ஆதாரம்:** (1) 63 லா வீக்லி 926; (2) 1950 (2) மதராஸ் லா ஜர்னல் 475.

சென்னை கூட்டுறவு சங்கச் சட்டத்தின் (The Madras Co-operative Societies Act, 1932) 51-ஆவது செக்ஷன் கூட்டுறவுச் சங்கங்கள் சம்பந்தப்பட்ட சச்சரவுகளையும் வழக்குகளையும் பற்றியது. இதன்படி ஒரு ரிஜிஸ்டரான கூட்டுறவுச் சங்கத்தின் அலுவல்கள் சம்பந்தமாய் (Dispute touching the business of a registered Society) ஒரு சண்டை, வழக்கு அல்லது சச்சரவானது கீழ்க்கண்டவர்களுக்குள் ஏற்பட்டால் அவர்கள் அது சம்பந்தமாய், மற்றவர்களைப் போல், சிவில் கோர்ட்டுகளில் யாதொரு வழக்கும் போட முடியாது. இவ்வித வழக்கைக் கோவாபரேடிவ் சொசைட்டி ரிஜிஸ்ட்ராருக்குத் தாகல் செய்யவேண்டும். அவர் அவ்வழக்கைத் தாமே விசாரணை செய்தாலும் செய்வார்; அல்லது இவ்வித வழக்குகளை விசாரிக்க சர்க்காரால் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கும் வேறு

ஒருவருக்கு அனுப்புவார்; அல்லது விதிகளின் படி மத்யஸ்தர்களுக்கும் இவ்வித வழக்குகளை அவர் அனுப்பலாம். இவர்கள் மேற்கண்ட விதமுள்ள "கோவாபரேடிவ்" வழக்குகளை விசாரித்துத் தீர்ப்புச் சொல்லலாம். அவர்களின் தீர்ப்பு சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்களைக் கட்டுப் படுத்தும். இவ்வித தீர்ப்புக்கள் செல்லமாட்டாவென்று ஒருவரும் சிவில் அல்லது ரெவின்யூ கோர்ட்டுகளில் சொல்ல முடியாது.

யார் யாருக்கிடையில் இவ்வித வழக்கு ஏற்பட்டால், அதை விசாரிக்க சிவில் கோர்ட்டுகளுக்கு அதிகாரமில்லை என்றும் அச்சட்டத்தில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. அதாவது (1) ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தினர்கள், ஏற்கனவே அங்கத்தினர்களாக இருந்தவர்கள், இவர்கள். மூலம் அல்லது இறந்த அங்கத்தினர் மூலம் பாத்தியம் கொண்டாடுபவர்கள்—இவர்களுக்குள் ஒருவருக்கொருவர் இடையே ஏற்படும் வழக்குகள். (2) அல்லது மேற்கண்டவர்களுக்கும், அந்தக் கூட்டுறவுச் சங்கம் அல்லது அதன் கமிட்டி, அதன் உத்தியோகஸ்தர், ஏஜண்டு, சிப்பந்தி, இவர்களுக்கும் இடையே ஏற்படும் வழக்குகள். (3) அல்லது அக்கூட்டுறவு சொசைட்டி அல்லது அதன் கமிட்டிக்கும்-அதன் பழைய கமிட்டி, அல்லது அதன் உத்தியோகஸ்தர், ஏஜண்டு, சிப்பந்தி, அல்லது ஏற்கனவே இவ்விதம் இருந்தவர்கள், அல்லது அவர்களின் வார்சுகள் இவர்களுக்கிடையே ஏற்படும் வழக்குகளையும் ஏற்றுக்கொள்ள கோவாபரேடிவ் ரிஜிஸ்ட்ராருக்கு மேல்கண்டவிதம் அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது.

மேலே சொல்லப் பட்டவர்களுக்குள் ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் "அலுவல்கள்" சம்பந்தமாக ஏற்படும் வழக்குகள் தான், அச்சட்டப்படி ரிஜிஸ்ட்ராரிடம் தாகல் செய்யப்பட வேண்டுமென்று இருக்கும் கூட்டுறவுச் சட்டத்தின் வாசகம், சமீபத்தில் ஏற்பட்ட இரண்டு சென்னை ஹைகோர்ட் தீர்ப்புகளினால் விளக்கம் செய்யப் பட்டிருக்கின்றது.

ஒரு வழக்கில், ஏற்கனவே ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் வேலை பார்த்த ஒரு சிப்பந்தி, அச்சங்கத்தில் தாம் கட்டியிருந்த ஜாமீன் தொகையும், தம்முடைய சம்பளப் பாக்கியும் கிடைக்க வேண்டுமென்று, அச்சங்கத்தின் மீது டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டில் தாவா செய்தார். அவ்வழக்கில் பிரதிவாதியாகிய அச்சங்கம், இவ்வழக்கு அச் 'சொசைடி' யின் அலுவல்களைப் பற்றியதாகையால், அதைக் கூட்டுறவுச் சட்டப்படி சிவில் கோர்ட்டுகளில் விசாரிக்க முடியாதென்று கட்சி சொன்னார்கள். இக்கட்சி டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டில் ஒப்புக்கொள்ளப்படவில்லை. அக்கூட்டுறவுச் சங்கத்தால் ஹைகோர்ட்டுக்கு ரிவிஷன் செய்து கொள்ளப் பட்டது. ஹைகோர்ட்டில் உயர் நீதிபதி கனம் கோவிந்த மேனன் அவர்களால் டிஸ்டிரிக்ட் முன்சீப்பின் தீர்ப்பு உறுதி செய்யப்பட்டது. அச்சங்கத்தின் "அலுவல்கள்" சம்பந்தமான வழக்குகளைத் தான் சிவில் கோர்ட்டில் போடமுடியாதென்றும், ஏதோ ஒரு விதமான கூட்டுறவுத் தொழில் அல்லது வியாபாரம் செய்வதுதான் அச்சங்கத்தின் "அலுவல்களே" ஒழிய ஒரு சிப்பந்தியிடம் ஜாமீன் தொகை வாங்குவது, சம்பளம் கொடுப்பது இவைகள் எல்லாம் அச்சங்கத்தின் "அலுவல்கள்" ஆகமாட்டா என்றும், ஆகையால் அவ்வழக்கை விசாரிக்க சிவில் கோர்ட்டுக்கு அதிகாரமுண்டென்றும் நீதிபதி அவர்கள் தீர்ப்பளித்தனர்.

மற்றொரு வழக்கு:—ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் கமிட்டி கூடி அதன் தலைவரை அப்பதவியிலிருந்து விலக்கியதாகவும் புதுத் தலைவரைத் தேர்ந்தெடுத்ததாகவும் ஒரு தீர்மானம் செய்தது. இத்தீர்மானத்தால் நீக்கப்பட்ட தலைவர், மற்றக் கமிட்டி அங்கத்தினர்கள் மீது அத்தீர்மானம் சட்ட விரோதமென்றும் செல்லாதென்றும், அத்தீர்மானப்படி புதிய தலைவரை அவ்விதம் பதவி வகிக்கக் கூடாதென்று தடை உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்றும் சப் கோர்ட்டில் ஒரு தாவா செய்தார். பிரதிவாதிகள் அதே கட்சிதான் சொன்னார்கள். அதாவது, இவ்வழக்கு அச்சங்கத்தின் "அலுவல்கள்" சம்பந்தமானதால், சிவில் கோர்ட்டுகளில் விசாரிக்க முடியாதென்று கட்சி சொன்னார்கள். இக்கட்சியை, சப்ஜட்ஜ் ஒப்புக்கொள்ளவில்லை. அதன் மீது ஏற்பட்ட ஹைகோர்ட் ரிவிஷனிலும் உயர் நீதிபதி கனம் கோவிந்த மேனன் அவர்களும் அக்கட்சியை அங்கீகரிக்கவில்லை.

ஒரு சங்கத்தின் தலைவரை நீக்குவது அச்சங்கத்தின் "அலுவல்" அல்ல என்றும் ஆகையால், இவ்வித தாவாக்களை விசாரிக்க, சிவில் கோர்ட்டுகளுக்கு அதிகாரமுண்டென்றும் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டனர்.

## முனிசிபாலிடியால் விதிக்கப்பட்ட வரி அதிகமாக இருந்தால்— கோர்ட்டில் தாவா செய்து பரிகாரம் தேடிக்கொள்ள முடியுமா?

**கோர்ட்: சென்னை ஹைகோர்ட்**

**நீதிபதி: நீதிபதி கனம் பாலகிருஷ்ணய்யர் அவர்கள்.**

**ஆதாரம்: 1950 ஆல் இந்தியா ரிபோர்ட்டர், மதராஸ் 594.**

விஜயவாடா முனிசிபாலிட்டியால் ஒரு வீட்டின் சொந்தக்காரருக்கு ஒரு அரை வருடத்திற்கு ரூ. 105-12-11 ஆக வீட்டு வரி விதிக்கப்பட்டது. அந்த வீட்டுக்கு மாத வாடகை ரூ. 90 ஆக வைத்து இவ்விதம் வரி விதிக்கப்பட்டது. இவ்விதம் இரண்டு அரை வருடங்களுக்குள்ள வரியும் நடவடிக்கை எடுத்து வசூல் செய்யப்பட்டுவிட்டது. வீட்டின் சொந்தக்காரர் தம் வீட்டிற்கு அவ்வருடத்தில் மாதம் ஒன்றுக்கு ரூ. 50 தான் வாடகை வந்ததென்றும், அந்தக் கணக்குப்படி ஒரு அரை வருடத்திற்கு வரி ரூ. 61—10—6 தான் ஆகுமென்றும் முனிசிபாலிட்டியாரால் அதிக வரி வசூல் செய்யப்பட்டுவிட்டதென்றும், அதிகமாக வசூல் செய்யப்பட்ட வரி தமக்கு முனிசிபாலிட்டியால் திரும்பக் கிடைக்க வேண்டுமென்றும் முனிசிபாலிட்டியின் மீது 'ஸ்மால் காஸ்' வழக்குத் தொடர்ந்தார். இவ்வழக்கை விசாரித்த டிஸ்டிரிக்ட் முன்சீப் வாதியின் கட்சியை ஏற்றுக்கொண்டு முனிசிபாலிட்டியால் அதிகமாக வசூல் செய்யப்பட்ட தொகையை அவர்கள் வாதியிடம் திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமென்று தீர்ப்பளித்தார். அத் தீர்ப்பின் பேரில் முனிசிபாலிட்டியால் ஹைகோர்ட்டுக்கு 'ரிவிஷன்' மனு கொடுக்கப்பட்டது.

ஹைகோர்ட்டில் உயர் நீதிபதி அவர்கள் கீழ்கோர்ட்டின் தீர்ப்பு சரியல்ல என்று அபிப்பிராயப்பட்டு இது சம்பந்தமான சட்டமும் விளக்கப்பட்டிருக்கிறது.

ஜில்லா முனிசிபாலிட்டி சட்டத்தில் ஒரு கட்டடத்திற்கு எப்படி வரி விதிக்கப்படவேண்டுமென்ற ஷரத்துக்கள் தெளிவாக இருக்கின்றன. அச்சட்டத்தின் 82 ஆவது செக்ஷனில் ஒரு கட்டடத்திற்கு எந்த எந்த ஆதாரத்தின்மேல் வரித் தொகையை நிர்ணயம் செய்யவேண்டுமென்பது சொல்லப்பட்டிருக்கிறது. செக்ஷன் 83ல் எந்தக் கட்டடங்களுக்கு வரி கிடையாதென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. வரி விதிக்கப் படுவதில் எல்லாக் கட்டடங்களுக்கும் ஒரே விகிதமாக இருக்கவேண்டுமென்று 84 ஆவது செக்ஷனில் வற்புறுத்தப்படுகிறது. செக்ஷன் 85ல் வரித்தொகைக்கு வீடு ஜாமீனாகப் பாவிக்கப்படுகின்றது. 86 ஆவது செக்ஷனில் எந்தக் கெடுவுக்குள் வரி செலுத்தப்படவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. மற்ற விவரங்கள் 4ஆவது ஷெடியூலில் இருக்கின்றன. இதன் 6 வது விதியின்படி முனிசிபாலிட்டியின் நிர்வாக அதிகாரிதான் (Executive Authority) ஒரு கட்டடத்தின் வருட வாடகை மதிப்பு எவ்வளவென்று நிர்ணயம் செய்து அதன் பேரில் அதற்கான வரி விதிப்பார். இவ்விதம் விதிக்கப்படும் வரி அதிகமென்று ஒருவருக்குத் தோன்றினால் முனிசிபல் சட்டத்திலுள்ளபடி அதை புனராலோசனை செய்யவேண்டுமென்று நிர்வாக அதிகாரிக்கு 'ரிவிஷன்' மனுகொடுக்கவேண்டும். அதிலும் பிரயோஜனமில்லை என்றால் அதன் பேரில் முனிசிபல் சட்டத்தில் கண்ட நிபந்தனைகளை அனுசரித்து முனிசிபல் கவுன்சிலுக்கே அப்பீல் செய்யலாம். அவர்கள் தீர்மானம் முடிவானது. ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை ஒரு முனிசிபாலிட்டியிலுள்ள எல்லாக் கட்டடங்களுக்கும் பொதுவாக வரி பரிசிலனை செய்யப்பட்டு விதிக்கப்படும். இதற்கு நடுவேயும் ஒரு கட்டடத்திற்கு வரியை உயர்த்த நிர்வாக அதிகாரிக்கு அதிகாரம் இருக்கின்றது. இவ்விதம் செய்யுமுன் அதனால் பாதிக்கப்படுபவருக்கு நோட்டீஸ் மூலம் தெரிவித்து அவருக்கு ஆட்சேபனை சொல்ல சந்தர்ப்பமளித்து வரியை உயர்த்த வேண்டும்.

இவ்விதம் முனிசிபல் சட்டத்தில் கண்டிருக்கும் விதிகளைச் சரிவரவும் ஒழுங்காகவும் அனுசரித்து அச்சட்டத்தில் கண்டிருக்கும் முறைப்படிக்கு விதிக்கப்படும் வரியானது அதிகமென்றாவது, வசூல் செய்யப்பட்ட வரி திரும்பிக் கிடைக்கவேண்டுமென்றாவது சிவில் கோர்ட்டுகளில் ஒருவரும் முனிசிபாலிட்டியின் மீது வழக்குத் தொடாமுடியாதென்று முனிசிபல் சட்டத்தின் செக்ஷன் 354 ல் ஒரு தடை இருக்கின்றது. ஆகையால் தமக்கு விதிக்கப்பட்டிருக்கும் வரி அதிகமென்று தோன்றிய இந்த நம்பர் வாதி, முனிசிபல் சட்டத்தில் காணப்பட்டிருக்கும் முறையை அனுசரித்து அச்சட்டத்தில் குறிப்பிடப்படும் அதிகாரிகளுக்கு இது சம்பந்தமான மனு முதலியவை செய்து கொள்ளலாமே ஒழிய சிவில் கோர்ட்டில் அவர் முனிசிபாலிட்டியின் மீது வழக்குத் தொடருவதை முனிசிபல் சட்டம் தடுக்கிறதென்றும் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டு வாதியின் தாவா தள்ளப்பட்டது.

ஆனால் எப்பொழுதுமே ஒருவரும் முனிசிபாலிட்டியின்மீது வரி சம்பந்தமாய்த் தாவா செய்யவே முடியாதென்பதுமில்லை. முனிசிபல் சட்டத்தையும் விதிகளையும் முறையே அனுசரித்துப் போடப்பட்ட வரிகளைப் பற்றித்தான் சிவில் கோர்ட்டுகளில் தாவா செய்யத் தடை இருக்கிறதே ஒழிய, அச்சட்டத்தின் ஷரத்துகளையும், விதிகளையும் அனுசரிக்காமலும், அதில் கண்ட முறையை அனுஷ்டிக்காமலும் விதிக்கப்படும் வரியைப்பற்றி சிவில் கோர்ட்டுகளில் வழக்குத் தொடர இடமுண்டென்பதும் நீதிபதி அவர்களால் எடுத்துக் காட்டப்பட்டது.

**உதாரணமாக:**—ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை பொதுவாக வரிப் பரிசிலனை செய்யப்பட்டு (General Revision) வரி விதித்தவுடன், அது சம்பந்தமான ஆட்சேபனைகள் உள்ளவர்கள் புனராலோசனை மனு செய்து கொள்ளலாமென்று நிர்வாக அதிகாரி ஒரு பொது அறிவிப்பும் விளம்பரமும் செய்ய வேண்டும். இவ்விதம் முனிசிபாலிட்டியால் செய்யப்படாமல் தம்மீது விதிக்கப்பட்ட வரி செல்லாதென்று ஒருவர் சிவில் கோர்ட்டில் செய்த தாவா ஏற்றுக் கொள்ளப்பட்டது (61 மதராஸ்லா ஜர்னல் 642). மேலும் ஒரு முனிசிபாலிட்டியில் தொழில் வரி கொடுப்பவருக்கு அதே காலத்திற்கு வேறு ஒரு முனிசிபாலிட்டியும் தொழில் வரி விதிகககக் கூடாதென்று இருக்கிறது. இதற்கு மாறாக ஒரு முனிசிபாலிட்டியால் வரிவிதிக்கப்பட்டவர் சிவில் கோர்ட்டில் பரிகாரம் தேடிககொள்ளமுடியும் (55 லா வீக்லி 541). வரி வசூல் செய்யுமுன், வரிவிதிக்கும் நோட்டீஸ் (Notice of Assessment) கொடுக்கப்படவேண்டும். இவ்விதம் சட்டப்படிக்கான நோட்டீஸ் கொடுக்காமலே வசூல் செய்யப்பட்ட வரியை திரும்பி வாங்க, சிவில் கோர்ட்டில் ஒருவர் செய்த வழக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டது. (1928 மதராஸ் 348)

தபால் மூலம் ஹிந்தி, ஸமஸ்க்ருதம் கற்று பரீக்ஷைகளுக்கு செல்ல 2 அணா ஸ்டாம்புடன் விண்ணப்பிக்கவும். ப்ராத்மிக் முதல் ப்ரவீண் வரை பாட புஸ்தகங்கள், நோட்ஸ்கள் கிடைக்கும். ரிப்ளை கார்டு, அல்லது, ½ அணா ஸ்டாம்புடன் எழுதவும்.

நவபாரத் ஹிந்த் வித்தியாலயம்,
20, சக்ரபாணி வடக்கு வீதி,
கும்பகோணம்.

உயர்ந்த
தந்தி "ROYAL"
ALB
பட்டு & ஜரிகை
ஜவுளி உற்பத்தியாளர்
பாலகிருஷ்ணையர்.
8. ஸௌராஷ்டிர பெரிய தெரு, கும்பகோணம்

தாக சாந்தி! மன இன்பம்!!

நீங்கள் அருந்தும் ஒவ்வொரு துளியிலும் அமிர்தம் போன்ற சுவையைக் காண்பீர்கள்! உயர்ந்த முறையில் தயாரித்துள்ள ஷர்பத் பான வகைகள், விலை நயம், அன்பர்கள் யாவரும் விஜயம் செய்யுங்கள்!

பாம்பே ஐஸ் கூலிங் அண்டு ஷர்பத் கம்பெனி
103, பெரிய தெரு, :: கும்பகோணம்.

# தெளிவு

[சென்றமாத "வக்கீல்" பத்திரிகையில் "அடுத்துவரும் இதழ்களில்" என்ற தலைப்பின் கீழ் சில சட்டப் பிரச்னைகள் கொடுக்கப் பட்டுள்ளன. அதேவிதமான சட்ட சந்தேகங்கள் எழும்பிய சமீப கால வழக்குகளில் உயர் நீதிபதிகள் எவ்விதம் அச்சந்தேகங்களைத் தெளிவு செய்தனர் என்று கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது. அதே வரிசையில் இத் "தெளிவு" களையும் படித்துக் கொள்ளவும். உதாரணமாக சென்ற மாதத்தில் 2ஆவது எண்ணுகக் கொடுக்கப்பட்டிருக்கும் சந்தேகத்திற்கு கீழே 2ஆவது எண்ணுள்ள "தெளிவை"ப் படித்துக் கொள்ளவும்.]

1. கோர்ட் மூலம் ஒருவர் "பைத்தியம்" என்று நிர்ணயம் செய்யப்பட்டிருந்தால், அவருடைய சொத்துக்களை நிர்வாகம் செய்வதற்காக கோர்ட்டால் நியமிக்கப்படுபவர்தான் அச்சொத்துக்களைக் குத்தகைக்கும் விடலாம். அப்படிக்கில்லாமல், பைத்தியமாக இருப்பவருடைய மனைவி அவருக்குக் "கார்டியன்" என்று எழுதி ஏற்படுத்தும் குத்தகை செல்லாது. குத்தகைதாருக்கு பாத்தியமும் ஏற்படாது. (நீதிபதி ராகவ ராவ் அவர்கள்)

2. தாமே சுயமாகச் சம்பாதித்த சொத்தை தம் மகனுக்கு உயில் மூலம் கொடுக்கும் தகப்பனே அச் சொத்துக்களைத் தம் மகன் எவ்விதம் அடைய வேண்டுமென்று நிர்ணயம் செய்யலாம். அதாவது சொத்தை அடையும் மகன் தம் இஷ்டப்படி எவ்வித பராதீனமும் செய்யலாம் என்ற கருத்து அந்த உயிலில் வெளிப்படுத்தப் பட்டிருந்தால், அச்சொத்துக்களை அடையும் மகன் அவைகளைத் தம் தனி சொத்தாக அடைவார். இவ்விதமாகக் கொடுக்கப் பட்ட சொத்து 'குடும்ப சொத்து' ஆகாது. மகனுடைய மகன்களுக்கு அதில் பாத்தியம் ஏற்படாது. ஆனால் சொத்தைக் கொடுக்கும் தகப்பன் அவ்விதம் ஒன்றும் சொல்லாமல் பொதுவாக "என் சுய சம்பாத்தியமான இச் சொத்துக்களை என் மகன் அடைகிறது" என்பது போல் எழுதியிருந்தால் இச்சொத்து குடும்ப சொத்தாகும். அப்பொழுது அச்சொத்து உயில் மூலம் சொத்தை அடையும் மகனுக்கும் அம் மகனுடைய மகன்களுக்கும் பாத்தியமுள்ள பொதுக் குடும்பச் சொத்துக்களாகும்.

3. ஒரு ஹிந்து ஸ்திரீயின் ஜீவனாம்சத்திற்காக ஒதுக்கப்படும் சொத்துக்களைச் சாதாரணமாய் அவள் தம் ஆயுள் வரைதான் அனுபவிக்கலாம். விற்பனை செய்யமுடியாது. விற்பனை என்று செய்தாலும் அவள் ஆயுள் வரைதான் அது செல்லும். அவளுடைய ஆயுளுக்குப்பின் அச் சொத்துக்கள் திரும்ப சொத்தைக் கொடுத்த குடும்பத்திற்கே போய்விடும். இது பொது விதி. ஆனால் சொத்தை அந்த ஸ்திரீக்கு அத்தருதியாக கொடுக்கப்பட்டாலும், அல்லது அவளுடைய ஆயுளுக்குப்பின் திரும்ப அவை குடும்பத்தைச் சேராது என்ற ஏற்பாட்டுக்கு ருசுவிருந்தாலும் அச்சொத்துக்களில் அவளுக்கு சர்வ சுதந்தர பாத்தியங்கள் உண்டு. அவள், அச் சொத்துக்களை விற்கலாம்.

4. பத்திரத்தை எழுதுபவர் (நெட்டெழுத்துக் காரர்) அப்பத்திரத்திற்கு 'சாட்சி' யாகவும் கையெழுத்துப் போடலாம். சாட்சி இல்லாவிட்டால் சில பத்திரங்கள் செல்லா. உதாரணமாக அடமானப் பத்திரத்திற்கு இரண்டு சாட்சிகள் வேண்டும். இருவர் சாட்சி போட்டிருக்கும் ஒரு பத்திரத்தில் ஒருவர் அப்பத்திரத்தை எழுதிய 'நெட்டெழுத்து' க்காரராக இருந்தால் அவருடைய கையெழுத்தை சட்டப்படிக்கான 'சாட்சி' யின் கையெழுத்தாக வைத்துக்கொள்ள முடியுமா என்ற பிரச்னை ஏற்பட்ட வழக்கில் மேற்கண்டபடி தீர்ப்பளிக்கப்பட்டது.

5. முதல் மனைவி உயிருடன் இருக்கும்போது, யாதொரு மேளதாளமும் இல்லாமல், புரோகிதர் முதலியோரும் இல்லாமல், ஒரு கோயிலில் தாலியை மட்டில் கட்டியவர் பலதாரத் தடைச் சட்டப்படி 'இரண்டாவது மணம்' செய்து கொண்ட குற்றம் செய்பவர்தான். (நீதிபதி சந்திராரெட்டி அவர்கள்)

6. முனிசிபாலிடியில் உள்ள ஒரு கட்டடத்திற்கு வாடகை மதிப்பு என்ன என்று நிர்ணயம் செய்வதில் முனிசிபாலிடியார் நியாயமற்ற முறையில் மனம்போன போக்குப்படி (capricious and arbitrary) வாடகை மதிப்பைப் போட்டுக்கொண்டு அதற்கான வரியை விதிப்பது, முனிசிபல் சட்டத்தின் ஷரத்துக்களை உண்மையாகப் பின்பற்றிச் செய்யும் காரியமாகாது. இவ்விதம் செய்யப்பட்டால், அது தவறு என்று தீர்மானிக்க சிவில்கோர்ட்டின் அதிகாரம் முனிசிபல் சட்டத்தால் பாதிக்கப்படவில்லை. (நீதிபதி ராகவ ராவ் அவர்கள்) இது சம்பந்தமான வேறு ஒரு தீர்ப்பும் இவ்விதழில் "வழக்கும்—தீர்ப்பும்" என்ற பகுதியில் இருப்பதைப் படிக்கவும்.

7. சினிமாக் கொட்டகையை வாடகைக்கு எடுத்து சினிமா நடத்துபவரும் இதற்கு நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவரே. (நீதிபதிகள் :— சுப்பராவ் அவர்களும் பஞ்சாபகேசய்யர் அவர்களும்)



# கேள்வியும் பதிலும்

இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டும் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் சுருக்கமாய் இருக்கவேண்டும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் அபிப்பிராயமே. கார்டுகளில் எழுதப்படும் கேள்விகளும் பென்சிலால் எழுதப்படும் கேள்விகளும் கவனிக்கப்படமாட்டா.

கேள்விகளுக்கு நேரில் பதில் கிடைக்க: "வக்கீல்" பத்திரிகையில் வரிசைக் கிரமமாய்ப் பதில் வெளிவரும் முன்பே பிரத்யேகமாகத் தபால் மூலம் நேராகப் பதில் கேட்கும் நேயர்கள் கேள்வி அடங்கிய தாளை ரிஜிஸ்டர் தபால் மூலம் காரியாலயத்திற்கு அனுப்புவதுடன் அத்துடன் தமது விலாசம் எழுதப்பட்ட கவர் ஒன்றும் ரூபாய் இரண்டு தபால் ஸ்டாம்பும் சேர்த்து அனுப்ப வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் தனித்தனி ஸ்டாம்பு அனுப்பவேண்டும். பிரத்தியேக பதில் அனுப்பப்படும்.

**கேள்வி:** (L. 3559-கேசவன் - திருச்சி) பாகம் பிரிந்துபோன இரண்டு (இந்து) சகோதரர்களில் மூத்தவர் இறந்தார். அவருக்கு இரண்டு மனைவிகள். மகள்களும் உண்டு. அம்மனைவிகளிடம், இறந்தவருடைய சொத்துக்களை எல்லாம் அவருடைய தம்பி கிரயம் பெற்று விட்டார். கிரயம் செய்த இரு மனைவிகளும் இறந்த பிறகு, அவர்களுடைய பெண்களாவது, பெண்களின் மகன்களாவது சொத்தைத் திருப்பி அடைய முடியுமா?

**பதில்:** வாரசு முறைமையில் புருடனுடைய சொத்துக்களை அடைந்த இரு மனைவிகளும் சட்டப்படி அவசியமான விஷயங்களுக்காகப் போதுமான சொத்தைமட்டில் கிரயம் செய்திருந்தால் அக்கிரயம் செல்லும். பெண்களையும் பேரன்களையும் கட்டுப் படுத்தும். அவர்கள் கிரய சொத்தைத் திருப்ப முடியாது. ஆனால் அவசியமில்லாத நிலைமையில் மனைவிகள் கிரயம் செய்திருந்தால் கிரயம் செய்த இருமனைவிகளும் இறந்த பிறகு, அவர்களுடைய பெண்கள் சொத்துக்களை திருப்ப முடியும். அப்பொழுது பெண்கள் இல்லாவிட்டால் பெண்களின் மகன்களும் அச்சொத்துக்களைத் திருப்ப முடியும்.

**கேள்வி:** (L 3591-பொன்னையா-மதுரை) ஒரு இந்து தம் பெண்ணுக்குக் கலியாண காலத்தில் ரூ. 1000 பெறுமானமுள்ள நகைகள் கொடுக்க வேண்டுமென்று கண்டு உயில் எழுதி வைத்தார். உயில்படி சொத்தை அனுபவிப்பவர், பெண்ணுக்குக் கலியாணமாகியும் உயில்படி தொகைகொடுக்காமலிருந்தால் நகைகள் கிடைக்க தாவா தொடரலாமா? அல்லது பெண்ணுக்கு தகப்பன் சொத்திலேயே பாகம் கிடைக்குமா?

**பதில்:** உயில் சட்டப்படி செல்லுபடி உள்ளதாக இருந்தால், நகையாவது அதன் மதிப்பாவது கிடைக்கத்தான் பெண் தாவா தொடரலாம். அவளுக்குச் சொத்தில் பாகம் கிடைக்காது. ஆனால் 'உயில்' செல்லுபடி உள்ளதாக இல்லாதிருந்தால், அப்பெண்தான் தகப்பனுக்கு வாரசு. எல்லா சொத்துக்களையும் அவளே அடைவாள்.

**கேள்வி:** (L 3592 -மல்லாஜு-கீழக்கரை) இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் 3 ஆவது

பாகம் 28 ஆவது ஷரத்தில் "பொது ஜனங்கள் நன்கொடை சாசுவத நிதியால் நடை பெறும் கல்வி ஸ்தாபனங்களில், மத போதனை நடத்த நன்கொடையாளர்கள் விரும்பினால் அவ்விதமே நடத்தலாம்" என்று சொல்லப் பட்டிருக்கிறது. இக்கல்வி ஸ்தாபனங்களுக்குச் சர்க்கார் கிராண்டு கிடைக்குமா?

**பதில்:** சர்க்கார் கிராண்ட் கிடைக்கும். ஆனால் சர்க்கார் உதவி (கிராண்டு) பெற்று நடத்தப்படும் இவ்வித கல்வி ஸ்தாபனங்களில் கொடுக்கப்படும் மத போதனையில் மாணாக்கர்களை பங்கெடுத்துக் கொள்ள வேண்டுமென்று ஒருவரும் வற்புறுத்த முடியாது. மாணாக்கரே வயது வந்தவராக இருந்தால் அவரும், மாணாக்கர் மைனராக இருந்தால் அவருடைய கார்டியனும், சம்மதம் கொடுத்தால்தான் இவ்வித மதபோதனைகளில் மாணாக்கர் பங்கெடுத்துக் கொள்ளலாம். சர்க்காரே நேரில் நடத்தும் கல்வி ஸ்தாபனங்களில் மத போதனையே இருக்காது.

**கேள்வி:** (டை) இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 4 ஆவது பகுதி 44 ஆவது ஷரத்தில் "இந்தியா முழுவதிலும் பிரஜைகளுக்கு ஒரே விதமான சிவில் சட்டங்கள் (Civil code) ஏற்படுத்த அரசாங்கம் முயற்சிக்க வேண்டும்" என்றிருக்கிறதே. அப்படியானால் "மூசமதியர் சட்ட" மெல்லாம் எற்றுக்கொள்ளப் படமாட்டாதா?

**பதில்:** அரசியல் அமைப்புச் சட்டத்தின் 4 ஆவது பகுதி "அரசாங்கத்தின் லட்சியங்களை" விவரிப்பது. அதில் கண்டிருக்கும் லட்சியங்களுடன் சட்டங்கள் செய்ய அரசாங்கம் முயற்சி செய்ய வேண்டு மென்றுதான் இருக்கிறது. ஹிந்துக்கள், முஸ்லீம்கள், கிறிஸ்துவர்கள் முதலிய எல்லா மதத்தினருக்கும் ஒரே விதமான பல 'சிவில்' சட்டங்கள் இப்பொழுதே இருக்கின்றன. உதாரணமாக:—சொத்து மாற்றச் சட்டம் (Transfer of property Act); ஒப்பந்தச் சட்டம் (Contract Act) ஸ்டாம்பு சட்டம், ரிஜிஸ்ட்ரேஷன் சட்டம் போன்ற பல சட்டங்கள் யாவருக்கும் இப்பொழுதும் பொதுவானதே. ஆனால் வாரசு பாத்தியம், விவாகம், சுவீகாரம், தர்ம ஸ்தாபனம், சில சொந்த விஷயங்களில் மட்டில் (personal law) இப்பொழுது இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் வெவ்வேறான சட்டங்கள் இருக்கின்றன. இவ்வித விஷயங்களில்கூட வித்தியாசமில்லாமல் வருங்காலத்தில் சட்டங்கள் செய்யும்படி 44 ஆவது ஷரத்து அரசாங்கங்களுக்கு ஒரு லட்சியத்தைக் காண்பித்திருக்கிறது. அவ்வித சட்டம் வரும்பொழுது 'இந்து சட்டம்', 'முஸ்லீம் சட்டம்' என்பது போன்றவை தனித் தனியாக இருக்காது.

**கேள்வி:** (L 3593 - சாமி) ஒருவர் 1948ல் மணம் செய்து கொண்டார். பெண் தன் தாய் வீட்டிலேயே இருக்கிறாள். புருஷன் வீட்டுக்குப் பெண்ணை அனுப்பப் பணம் கொடுத்தால்தான் முடியுமென்றும், இல்லாவிட்டால் பெண்ணுக்கு மறுமணம் செய்து விடுவதாயும் பெண் வீட்டுக்காரர்கள் சொன்னால், புருஷன் என்ன செய்வது?

**பதில்:** பயப்படவேண்டாம். பெண், தன் முதல் விவாகத்தை ரத்து செய்து கொள்ளாமல் வேறு ஒருவரை மணம் செய்து கொள்வது ஒரு பெரிய குற்றமாகும். காரணம் ஒன்றுமில்லாமல், மனைவி புருஷனுடன் இருக்க மறுத்தால், அவள் தம்முடன் வந்து வசிக்க வேணடுமென்று புருஷன் கோர்ட்டில் தாவா செய்யலாம். இதற்கு "தாம்பத்திய வாழ்க்கையை வற்புறுத்தல்" (Suit for Restitution of Conjugal Rights) என்று சொல்வது. ஆனால் உண்மை தாம்பத்திய வாழ்க்கையை விரும்பும் கணவனுக்கு கோர்ட்டும், சட்டமும் தேவையில்லை.

**கேள்வி:** (L 3599 - அப்புசாமி – சேலம்) ஒருவர் கொடுக்கவேண்டிய கடனுக்காக அவருடைய நிலம் கோர்ட் ஏலம் போய் அதை வேறு ஒருவர் எடுத்திருக்கிறார். ஏலத்தொகை கடனுக்குக்குறைவாக இருந்தால், ஏலம் போன நிலத்தை அக்கடன் பாக்கி பாதிக்குமா?

**பதில்:** பாதிக்காது.

**கேள்வி:** (L 3611 - வர்த்தக சங்கம்-திருச்சி) ஒருவர் ஒரு இடத்தில் தம் சொந்த ஹோதாவில் வியாபாரம் செய்கிறார். அவர் வேறு இடத்தில் மற்றொருவருடன் சேர்ந்து கூட்டு வியாபாரம் செய்கிறார். விற்பனை வரிச்

சட்டப்படி, இரண்டு இடங்களிலுமுள்ள கணக்குகளையும் சேர்த்து, 'மொத்த வியாபாரம்' கணக்கு செய்யப்படுமா? அல்லது தனித்தனியாக கணக்கிடப்படுமா?

**பதில்:** தனித்தனியாக கணக்கு செய்யப்படும்.

**கேள்வி:** (L 3619 - அருணாசலம்) ஒரு பிரிபடாத இந்து குடும்பத் தலைவர், சொற்ப பிதுரார்ஜித சொத்தைக் கொண்டும், தன் சுயப் பிரயாசையாலும் சொத்துக்கள் சம்பாதித்திருக்கிறார். அவருடைய ஒரே மகன் இறந்து விட்டார். பேரன்கள் இருக்கிறார்கள். பேரன்களில் ஒருவர் மட்டில் இச் சொத்துக்களில் பாகம் பிரித்துக் கேட்கலாமா? அவருக்கு எவ்வளவு பாகம்? பாகம் கேட்கும் பேரன் குடும்பத் தலைவருக்கு விடுதலை எழுதி ரிஜிஸ்டர் செய்து கொடுத்தால் போதுமா?

**பதில்:** பிதுரார்ஜித சொத்தின் உதவியைக் கொண்டு சம்பாதிக்கப்பட்ட சொத்துக்களும் குடும்ப சொத்துக்களே யாகும். பிதுரார்ஜித சொத்தின் உதவியில்லாமல் சுயப்பிரயாசையைக் கொண்டு சம்பாதிக்கும் சொத்துக்களை அதை சம்பாதிக்கும் குடும்பத் தலைவர் குடும்ப சொத்துடன் சேர்த்து வரவு செலவு செய்தாலும், அச் சொத்துக்களும் குடும்ப சொத்துக்களாகிவிடும். எல்லா குடும்ப சொத்துக்களிலும் பேரன்களுக்கு பாகம் உண்டு. குடும்ப சொத்துக்களில் பேர்பாதி குடும்பத் தலைவருடைய பாகம். பாக்கிப் பாதியை எவ்வளவு பேரன்கள் இருக்கின்றனரோ அவ்வளவு பாகமாகப் போட்டு அதில் ஒரு பாகத்தை பாகம் கேட்கும் பேரன் எடுத்துக் கொள்ளலாம். அப்பேரன் விடுதலைப் பத்திரம் எழுதிக்கொடுத்தாலும் போதும்.

**கேள்வி:** (L. 3628 - பச்சய்ய செட்டி - சேலம்) ஒருவர் தம் நிலம் வீடுகளை 1938ல் ரூ. 1000க்கு கிரயம் செய்து, கிரயப் பத்திரமும் ரிஜிஸ்டர் செய்து கொடுத்து, அன்றயதினமே வேறு ஒரு எக்ரிமெண்ட் மூலம், விற்றவர், வாங்கியவருக்கு ஒவ்வொரு வருடமும் ரூ. 200 கொடுத்தால் 5 வருடத்தில் திருப்பி சொத்தைக் கொடுத்துவிடுவதாக வாங்கியவர் ஒப்புக்கொண்டார். ஆனால் பிரதி வருடம் தொகை எதுவும் திருப்பிக்கொடுக்கவில்லை. விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டப்படி மனுப்போட்டால் சாதகமாகுமா?

**பதில்:** இதில் ஒருவரும் கடன் வாங்கவில்லை. இக் கேள்விக்கும் விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டத்திற்கும் (வெளிப்படையான) சம்பந்தம் ஒன்றுமில்லை.

**கேள்வி:** L 3631 - கிருஷ்ணசாமி - நாமக்கல்) ஒரு வியாபாரி ரொக்கமில் (டியூப்ளிகேட் வைத்து) கொடுப்பதில் ஸ்டாம்பு ஒட்டி கையெழுத்துப் போட்டுக் கொடுக்கவேண்டுமா? அப்படியானால், ஸ்டாம்பு ஒட்டாவிட்டால் செல்லுமா?

**பதில்:** ரூ. 20-க்கு மேல் உள்ள தொகைகளுக்கு ஒரு அணா ரெவின்யூ ஸ்டாம்பு நட்டித்தான் ஸ்டாம்பு சட்டப்படி ரசீது கொடுக்க வேண்டும். ஸ்டாம்பு ஒட்டா விட்டால் அது அதிகாரிகளிடமோ கோர்ட்டுகளிலோ தாகல் செய்யப்படும்போது அதற்கு ரூ. 1 ஸ்டாம்பு அபராதம் வாங்கிவிடுவார்கள்.

**கேள்வி:** ( 3642 - அஹமதுல்லா - ஆம்பூர்) நமது பிரதமந்திரிக்கு அதிக அதிகாரமா அல்லது ஜனாதிபதி அவர்களுக்கு அதிக அதிகாரமா?

**பதில்:** நமது அரசியல் அமைப்புச் சட்டத்தின் வாசகங்களைப் படித்துப் பார்த்தால் ஜனாதிபதி அவர்களுக்கே அதிக அதிகாரம்போல் தோன்றும். ஆனால் இங்கிலாந்திலிருப்பது போல், நமது பிரத மந்திரிக்குத்தான் உண்மையாக அதிக அதிகாரம். மந்திரி சபையின் தீர்மானங்கள் எல்லாம் ஜனாதிபதி அவர்களின் பெயரால் தான் நிறைவேற்றப்படும். இங்கிலாந்துக்கு மன்னர் எப்படியோ அப்படியே நமக்கு ஜனாதிபதி. மன்னர் பிரானுக்குள்ள மாட்சிமையும் அந்தஸ்தும் நமது ஜனாதிபதி அவர்களுக்கு உண்டு.

**கேள்வி:** (ஷை) முனிசிபல் சேர்மென் அம்முனிசிபாலிடியிலுள்ள கமிஷனர் உள்பட எந்த அதிகாரியையும் சட்டப்படி நீக்க அதிகாரம் உண்டா?

**பதில்:** சேர்மென் ஒரு அதிகாரியையும் நீக்க முடியாது.

# கண்ட்ரோல்-லைசென்ஸ்-ரேஷன்-விலை நிர்ணயம்
## இதர சர்க்கார் அறிக்கைகள்

### ஜீனி - வெல்லச் சரக்கு - கட்டுப்பாடு உத்தரவு (1950) சென்னை ராஜ்ய அதிகாரிகள்

இக்கட்டுப்பாடு உத்தரவை அமுல் நடத்த சில சென்னை ராஜ்ய அதிகாரிகளுக்கு மத்திய சர்க்காரால் கீழ்க்கண்ட விதம் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரத்தை அவரவர் அதிகார எல்லைக்குள் செலுத்தலாம்:—

(1) சென்னை சிவில் சப்ளைஸ் கமிஷனர்.

இக்கட்டுப்பாடு உத்தரவின் 9 ஆவது கிளாஸில் கண்ட எல்லா அதிகாரங்களும்:—அதாவது (1) எந்த உற்பத்தியாளரையும், வியாபாரியையும் எவ்வித கணக்குகள் வைத்துக் கொள்ள வேண்டுமென்று உத்தரவிட (2) அவர்களைத் தேவையான விஷயங்களைப் பற்றி தகவல் சொல்லும்படி உத்தரவிட (3) அவர்களுடைய கணக்குகளைப் பரிசோதனை செய்ய (4) அவர்களின் இடங்களைச் சோதனை போட உத்தரவிட அதிகாரம் உண்டு. (2) எல்லா ஜில்லா கலெக்டர்கள். மேற்கண்ட எல்லா அதிகாரங்களும் (ஆனால் வாகுவம்பான் முறையில் ஜீனி உற்பத்தி செய்பவர்கள் சம்பந்தப்பட்டவரையில் ஜில்லா கலெக்டர்களுக்கு யாதொரு அதிகாரமுமில்லை) (3) சப்இன்ஸ்பெக்டர் அந்தஸ்துக்குக் குறையாத எல்லா போலீஸ் அதிகாரிகள், (4) ரெவின்யூ இன்ஸ்பெக்டர் அந்தஸ்துக்குக் குறையாத எல்லா ரெவின்யூ உத்தியோகஸ்தர்கள், (5) 1949 ஆம் வருடத்திய ஜீனி உற்பத்தித் தொழிற்சாலைக் கட்டுப்பாடு உத்தரவின்படி நியமிக்கப்பட்டிருக்கும் இன்ஸ்பெக்டர்கள் இவர்களுக்கு சோதனை போடவும் பரிசோதனை செய்யவும் (Search and Inspection only) மட்டில் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

(19—10—1950 இந்தியா கெஜட்-விசேஷ வெளியீடு—S. R. O. 792-பக்கம் 877)

**மற்ற அதிகாரங்கள்:-** 1950 ஆம் வருடத்திய ஜீனி-வெல்லச் சரக்குக் கட்டுப்பாடு உத்தரவின் 4, 5, 6, 7 (ii) 8 இந்தக் கிளாஸ்களின்படி மத்திய சர்க்காருக்குள்ள எந்த அதிகாரத்தையும் சென்னை சிவில் சப்ளை கமிஷனர் செலுத்தலாமென்றும்; மேற்படி உத்தரவின் 4 (b) 6, 7, (ii) 8 இந்தக் கிளாஸ்களின்படி மத்திய சர்க்காருக்குள்ள எந்த அதிகாரத்தையும் எல்லா கலெக்டர்களும் செலுத்தலாமென்றும் மத்திய சர்க்காரால் உத்தரவிடப்பட்டிருக்கிறது. ஆனால் இவர்கள் மத்திய சர்க்காரால் ஏற்படுத்தப்பட்டும் பொதுவான அல்லது குறிப்பான உத்தரவுகளை அனுசரித்து இந்த அதிகாரங்களைச் செலுத்தவேண்டும். மேலும் அவரவர் அதிகார எல்லைக்குள்தான் இந்த அதிகாரங்களைச் செலுத்தலாம்.

[இந்த உத்தரவின்படி ஜில்லா கலெக்டர்களுக்குள்ள அதிகாரங்கள்: கிளாஸ் 4 (b) ன்படி லைசென்சில்லாமல் கரும்பிலிருந்து ஜீனியோ வெல்லச் சரக்கோ காய்ச்சக் கூடாதென்று உத்தரவிடலாம்; கிளாஸ் 6ன்படி ஜீனி வெல்லச் சரக்கின் விலையை நிர்ணயம் செய்யலாம். கிளாஸ் 7 (ii)ன்படி 'கோடா அலாட்' செய்யலாம்; கிளாஸ் 8 ன்படி உற்பத்தியாளருக்கும் வியாபாரிக்கும், உற்பத்தி, ஸ்டாக் வைத்திப்பது, விற்பனை, விலை, தரம், பாக்கிங், அடையாளம் போடுவது, நிறை, விநியோகம் முதலியவை சம்பந்தமான எவ்விதமான உத்தரவும் செய்யலாம்.]

(19—10—1950 இந்தியா கெஜட்—விசேஷ வெளியீடு S. R. O 792 A—பக்கம் 878 B)

### கூட்டுறவுச் சங்க விதிகள்

**லாபத்தைத் தவிர 'போனஸ்' கொடுக்க விதிகள்:-** கூட்டுறவுச் சங்க விதிகளில் விதி 12 (c) என்பது திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது. முன் இருந்த விதியின்படி ஒரு கூட்டுறவுச்சங்கத்தின் அங்கத்தினர்களுக்கு லாபத்தைத் தவிர 'போனஸ்' கொடுத்தாலும் இரண்டும் சேர்ந்து ரூல் 12 (a), 12 (b) இவைகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் அளவுக்கு மேல் கொடுக்கக்கூடாதென்று இருந்தது. அதாவது சென்னை மாகாணக் கூட்டுறவு பாங்கி முதல் தொகையில் ரூ. 100க்கு வருடம் 1க்கு 9 ரூபாய்க்கு மேலும், மற்றக் கூட்டுறவுப் பாங்குகள் 5% க்கு மேலும்; மற்ற கூட்டுறவுச் சங்கங்கள் $6\frac{1}{4}$%க்கு மேலும் லாபம் கொடுக்கக்கூடாதென்று இருந்தது. இப்பொழுது ஏற்பட்டிருக்கும் திருத்தப்படி, லேவாதேவி செய்யும் (Credit Society) கூட்டுறவுச் சங்கங்கள் தவிர, மற்ற எவ்விதக் கூட்டுறவுச் சங்கங்களும்-உதாரணமாக கூட்டுறவுப்பண்டகசாலை (Stores), நெசவாளர் சங்கம் (Weavers Society), பால் சப்ளை சங்கம், தொழில் ஒப்பந்த சங்கம்

(Labour Contract Society), மோட்டார் போக்குவரத்துச் சங்கம் (Motor Transport Society), கூட்டுறவுத் தொழிற்சாலை (Co-operative work shop) இவ்விதச் சங்கங்கள்-- நிகர லாபத்தில் ரூ. 100 க்கு ரூ. 20 க்கு மேற்படாமல் 'போனஸ்' கொடுக்கலாம். இதற்காக உபவிதிகள் (by-laws) ஏற்படுத்திக்கொள்ளலாம். இவ்விதிகளுக்கு ரிஜிஸ்ட்ராருடைய அங்கீகாரம் வேண்டும். இவ்விதமான கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தினர் ஒவ்வொருவரும் நடத்திய வியாபார அளவுக்கேற்றவாறோ அல்லது அங்கத்தினர்கள் அவரவர் சங்கத்திற்காகச் செய்த வேலையின் அளவுக்கேற்றவாறோ, அல்லது வேறு விதமான ஆதாரத்தின் பேரிலோ 'போனஸ்' என்ற லாபத் தொகையைப் பிரித்துக் கொடுக்கவேண்டுமென்று, அந்தந்தச் சங்கங்களில், மேற்கண்டவாறு விதிகள் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

ஆனால் ஏற்கனவே யுத்தத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் மோட்டார் போக்குவரத்துச் சங்கங்களில் (Motor Transport Society for Ex-Servicemen) அங்கத்தினராகவும் இருந்து அதிலேயே வேலைக்கும் அமர்ந்திருப்பவர்களுக்கு ஒரு வருடத்தில் மூன்று மாதச் சம்பளத்திற்கு மேற்பட்டு அவரவருக்குப் போனஸ் கொடுக்கக் கூடாது. நிகர லாபத்தில் 4-ல் 1 பங்குக்குக் குறைவாக இவ்விதம் போனஸ் கொடுத்தாலும் அதில் பாக்கி இருக்கும் தொகையை, 'போனஸ் சேமிப்பு நிதி'யாக (Bonus Equalization Fund) சேர்த்து வைக்கலாம். இதற்காகவும் உபவிதிகள் செய்து கொள்ளவேண்டும்.

(31—10—1950-சென்னை சர்க்கார் கெஜட் ரூல் சப்ளிமெண்ட்—பாகம் I, பக்கம் 417)

## சென்னை ஜமீன் - இனாம் நிலங்களின் வாரக் குறைப்புச் சட்ட விதிகள் - திருத்தம்

1947ஆம் வருடத்திய 'எஸ்டேட்' வாரக் குறைப்புச் சட்டத்தின் (The Madras Estates Land - Reduction of Rent - Act, 1947) செக்ஷன் 3 (4) படி ஜமீன் - இனாம் கிராமங்களிலுள்ள ரயத்து நிலங்களுக்கு ஏற்படுத்தப்படும் வாரக்குறைப்பு உத்தரவு 1357ஆம் பசலி முதல் அனுஷ்டிக்கப்படவேண்டுமென்றும்; குடிவார பாத்தியமுள்ளவர்கள் 1357ஆம் பசலி முதல் கொடுக்கவேண்டிய குறைக்கப்பட்ட மேல்வாரத் தொகை (அல்லது தானியத்தை) சர்க்காரே வசூல் செய்வார்களென்றும் இருக்கிறது. அந்தக் கிராமம் முடிவாகச் சர்க்காரால் எடுத்துக் கொள்ளப்பட்டுத் திறப்பாக்கப்படும் வரையில் இவ்விதம் சர்க்காரே மேல்வாரத்தை ரயத்துக்களிடமிருந்து வசூல் செய்து வருகிறார்கள். இப்படி ரயத்துக்களிடமிருந்து வசூல் செய்யப்படும் தொகையிலிருந்து 10ல் ஒரு பங்கை வசூல் செய்யும் செலவுக்காகச் சர்க்காரே எடுத்துக் கொள்வார்கள். பாக்கித் தொகையில் ஜமீன்தார் அல்லது இனாம்தாரால் சர்க்காருக்குக் கொடுக்கப்பட வேண்டிய பேஷ்குஷ், செஸ் முதலிய தொகைகளையும் பிடித்துக் கொண்டு மீதி இருப்பதை அந்தந்த ஜமீன்தார் அல்லது இனாம்தாருக்குக் கொடுத்து விடுவார்கள். இவ்விதம் கொடுக்கப்பட வேண்டிய தொகை விஷயமாய் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டிருந்த விதியில் இப்பொழுது ஒரு திருத்தம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதாவது இவ்விதம் ஒவ்வொரு வருஷமும் ஜமீன்தார் அல்லது இனாம்தாருக்குக் கொடுக்கப்பட வேண்டிய தொகை நிர்ணயப்படுவதற்கு முன்பே வசூலானாலும் வசூலாகாவிட்டாலும், அவர்களுக்குச் சில தவணைகளில் சர்க்காரால் தொகைகள் கொடுத்து வரும்படி ரெவின்யூபோர்டார் உத்தரவிடலாமென்று இருந்தது. இப்பொழுது இதை மாற்றி ரெவின்யூ போர்டின் உத்தரவில்லாமலே, ஜில்லா கலெக்டரே அவ்வப்பொழுது வசூலாகும் தொகைகளிலிருந்து வசூல் செலவையும், வீதாசார பேஷ்குஷ், செஸ் முதலியவைகளையும் கழித்துக் கொண்டு, ஜமீன்தார் அல்லது இனாம்தாருக்கு எத்தனை தடவைகளாகவும் தொகைகள் கொடுத்து வரலாமென்றும்; ஆனால் அவர்களுக்கு மொத்தத்தில் ஒரு வருடத்தில் கொடுக்க வேண்டியதாய் ஏற்படக்கூடிய தொகையில் ஒரு சரிபாதிக்கு மேற்படாமல்தான் இவ்விதம் கொடுத்து வரலாமென்றும் விதி 7(2) திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது.

(3-10-1950 சென்னை - சர்க்கார் கெஜட் - பாகம் I, ரூல் சப்ளிமெண்ட் - பக்கம் 390)

## சென்னை ஜமீன் - இனாம் ஒழிப்புச் சட்ட விதிகள்-பட்டா கிடைக்க 90 நாட்களுக்குள் மனுப்போட வேண்டும்

சென்னை ஜமீன்-இனாம் ஒழிப்புச் சட்டத்தின் செக்ஷன்கள் 12, 13 அல்லது 14ன்படி தமக்கு ரயத்துவாரிப் பட்டா கொடுக்கப்பட வேண்டுமென்று கோரும் ஒவ்வொரு ஜமீன்தார் அல்லது இனாம்தாரும், அந்த எஸ்டேட் சர்க்காரால் எடுத்துக்கொள்ளப்பட்டு, திறப்பாக மாற்றப்படும் என்ற கெஜட் விளம்பரத் தேதியிலிருந்து 90 நாட்களுக்குள் செட்டில்மெண்ட் ஆபீசருக்கு எழுத்து மூலம் மனுச்செய்து கொள்ள வேண்டும். மேற்கண்ட கெஜட் விளம்பரம் ஏற்கனவேயே

செய்யப்பட்டிருந்தாலும் இவ்விதிகள் சர்க்காரால் பிரசுரம் செய்யப்பட்ட தேதியிலிருந்து அதாவது 31—10—1950விருந்து 90 நாட்களுக்குள்ளும் மனுப்போடலாம். மனுக்கள், செட்டில்மெண்ட் ஆபீசருக்கோ, அல்லது அவருடைய அதிகாரங்கள் உதவி செட்டில்மெண்ட் ஆபீசருக்கு மாற்றப்பட்டிருந்தால், அவருக்கோ போடவேண்டும். இதற்காகச் செய்து கொள்ளப் படும் மனு இவ்விதிகளில் கண்ட நமூனு I ன்படி இருக்கவேண்டும். மனுதார் கையெழுத்தும் உறுதிமொழிக் கையெழுத்தும் இருக்கவேண்டும்; மனுவில் 12 அணு கோர்ட் பீசு ஸ்டாம்பு ஒட்ட வேண்டும். ஒவ்வொரு கிராமத்திற்கும் தனித் தனி மனுச் செய்யப்படவேண்டும். மனுவை நேரிலும் தாக்கல் செய்யலாம்; அல்லது அக்னாலட்ஜ்மெணட்டுடன் கூடிய ரிஜிஸ்டர் தபால் மூலமாகவும் அனுப்பலாம். பிறகு செட்டில் மெண்ட் ஆபீசர் விசாரணைக்காக ஒரு தேதி குறிப்பிட்டு இது விபரத்தை விதிகளில் கண்ட படி பிரசுரம் செய்வார். மனுதாருக்கும் நோட்டீஸ் வரும். விசாரணை தினத்தன்று விசாரித்து, செட்டில்மெண்ட் ஆபீசர் அல்லது உதவி செட்டில்மெண்ட் ஆபீசர் தீர்ப்பு செய்வார். மனு செய்தவருக்கு இத்தீர்ப்பு நகல் அனுப்பப்படும். இவ்வுத்தரவின் பேரில் அதனால் பாதிக்கப் பட்டவர் 'டிரிபுனலுக்கு' தீர்ப்பு தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் அப்பீல் செய்யலாம். அப்பீல் மனுவுக்கு ரூ. 2 கோர்ட் பீசு ஸ்டாம்பு ஒட்டவேண்டும். அப்பீல் மனுவுடன் செட்டில் மெண்ட் ஆபீசரின் தீர்ப்பு நகலும் அனுப்ப வேண்டும். (31—10—1950, சென்னை-சர்க்கார் கெஜட் - பாகம் I, ரூல் சப்ளிமெண்ட் - 423)

## சென்னை ஜமீன்-இனும் ஒழிப்புச் சட்ட விதிகள்

மேற்கண்ட சட்டத்தால் கொடுக்கப் பட்டிருக்கும் அதிகாரத்தை உபயோகித்து, சென்னைச் சர்க்காரால் கீழ்க்கண்ட விதிகள் செய்யப்பட்டிருக்கின்றன:—

1. ஒரு ஜமீன் அல்லது இனும் கிராமத்தை இச்சட்டப்படி திறப்பாக ஆக்குவதற்காக, சர்க்கார் தீர்மானித்து, அதைக் கெஜட்டில் விளம்பரம் செய்தவுடன், அந்த எஸ்டேட்டைச் சர்க்கார் சுவாதீனம் எடுத்துக் கொள்வார்கள் என்றும், ஆனால், அந்த எஸ்டேட்டில் உள்ள எந்த நிலத்திற்காவது இனும்தார் அல்லது ஜமீன்தாருக்கோ, அல்லது ராயத்துக்கோ இச்சட்டப்படி திறப்புப் பட்டா கொடுக்கக் கூடியதென்று சர்க்காருக்கு ஸ்பஷ்டமாகத் தோன்றினாலும் அவ்வித நிலங்களை மட்டில் சர்க்கார் சுவாதீனம் எடுத்துக் கொள்ளக்கூடாதென்றும் செக்ஷன் 3 (d) ல் சொல்லப்பட்டிருக்கின்றது. இதன்படி யார் பட்டா அடைய உரிமை உள்ளவரென்று சர்க்கார் முதலெடுப்பாக (Prima facie) நிர்ணயம் செய்யும் உத்தரவின் பேரில், 30 தினங்களுக்குள், அந்த உத்தரவால் பாதிக்கப்பட்டவர், அப்பீல் செய்யலாமென்று ஒரு விதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. தகுந்த காரணம் இருந்தால் 30 தினங்களுக்குப் பிறகு கொடுக்கப்படும் அப்பீல்களையும் அப்பீல் அதிகாரி ஏற்றுக்கொள்ளலாம்.

2. சென்னை ஜமீன் - இனும் ஒழிப்புச் சட்டப்படிக்கும், விதிகளின்படிக்கும், டிரிபுனல்கள், விசேஷ டிரிபுனல்கள், இன்னும் மற்ற அதிகாரிகள், உத்தியோகஸ்தர்கள் இவர்கள் முன் நடக்கும் எவ்வித நடவடிக்கைகளுக்கும் காலாவதிச் சட்டத்தின் (Indian Limitation Act, 1908) செக்ஷன்கள் 4, 5, 12, (1) 17 (1), (2), 18 இவைகளில் இருக்கும் விதிகளும் இனி பொருந்தும் என்று ஒரு விதி ஏற்படுத்தப் பட்டிருக்கின்றது. காலாவதிச் சட்டத்தின் செக்ஷன் (4) என்பது ஒரு நடவடிக்கை தாகல் செய்யப்பட வேண்டிய கெடு முடியும் காலத்தில் கோர்ட் மூடப்பட்டிருந்தால், கோர்ட் திறக்கும் தினத்தன்று தாகல் செய்யலாமென்பது; செக்ஷன் 5:—காலாவதி கெடுவுக்குள் மனு அல்லது அப்பீல் தாகல் செய்யப் படாவிட்டாலும் தகுந்த காரணங்களிருந்தால் அதைக் கோர்ட் ஏற்றுக்கொள்ளலாமென்பது; செக்ஷன் 12 (1) அப்பீல் செய்ய கெடுக் கணக்குச் செய்வதில், கீழ் கோர்ட் உத்தரவு ஏற்பட்ட தினத்தைச் சேர்த்துக் கொள்ள வேண்டியதில்லை என்பது. செக்ஷன் 17 (1) (2) என்பது தாவா அல்லது மனுப்போட பாத்தியம் ஏற்படும் முன்பே உரிமையாளர் இறந்துபோய் அவருடைய வார்சுகள் மைனர்களாகவோ பைத்தியமாகவோ இருந்தால் அவ்வார்சுகள் மேஜர் ஆகும்வரை, அல்லது பைத்தியம் நீங்கும் வரை காலாவதி நீடிக்கும் என்பது.

3. ஏற்கனவே ஏற்படுத்தப்பட்ட விதிகளில் ஜமீன் இனும் ஒழிப்புச் சட்டத்திலோ விதிகளிலோ குறிப்பிடப்பட்டிருக்கும் கெடுவுக்குப் பிறகு செய்யப்படும் மனுக்களையும், அப்பீல்களையும், ரிவிஷன் மனுக்களையும் தள்ளிவிட வேண்டுமென்று இருந்தது. இனி, மேலே கண்ட காரணங்களினால் ஏற்படும் காலதாமதத்தை நீக்கி காலாவதி நாட்கள் கணக்குச் செய்யப்படும்.

(17—10—1950-சென்னை சர்க்கார் கெஜட் பாகம் I, ரூல் சப்ளிமெண்டு 416)

187202

PRINTED BY N. RAMARATNAM, M.A., B.L., AT THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS, TIRUPUVANAM, TIRUVADAMARUDUR AND PUBLISHED BY R. NARASIMHAN, B.A., B.L., AT NO. 73, DABIR WEST STREET, KUMBAKONAM, FOR SOUTHERN BOOK HOUSE LTD. Editor;—V. S. VIJAYARAGHAVACHARI, B.A., B.L.

ஸ்தாபிதம் 1909. போன் நெ. 57 தந்தி விலாசம் "கோகுல்"

# டி. எஸ். ஆர். & கோ.,

## கும்பகோணம்.




பிராஞ்சு : (மன்னார்குடி)

கூந்தலுக்கு வளர்ச்சியையும் மூளைக்கு குளிர்ச்சியையும்
கொடுப்பதில் நிகரற்ற

சந்தனாதித்தைலம் அரைக்கீரைவிதைத்தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

வாசனைப்பாக்கு, பல காய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, ஊதுவத்திகள் பன்னீர் இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

SOLE AGENTS:

*For Madras*
SURAJ AGENCIES
MADRAS

*For Coimbatore, Palghat & Nilgiris*
B. BALAPATTABI CHETTIAR,
246, VYSYAL STREET, COIMBATORE.

Regd. No. M. 5399

# "வக்கீல்"

(பொது மக்களுக்கான)

## தமிழ் சட்டப் பத்திரிகை

(மாதம் ஒரு முறை)

எளிய தமிழில், புதிது
புதிதாய் வரும் சட்டங்களையும்,
கண்ட்ரோல், ரேஷன், லைசென்ஸ், விலை
நிர்ணயம், வருமான வரி, விற்பனை வரி, ஷாப் சட்டம்
போன்ற பல சட்ட விஷயங்களையும் சுலப
மாயும் தெளிவாயும் அனைவரும் அவ்வப்
பொழுது தெரிந்து கொள்ளலாம்.

விசேஷ பகுதிகள்: வழக்கும் – தீர்ப்பும்; கேள்வி – பதில்

**பிரதி இங்கிலீஷ் மாத முதல் தேதி வெளியாகும்**

"வக்கீல்" 1949 ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்டது.

**வருட சந்தா ரூ. 3.**

எல்லா சுதேசமித்திரன், ஹிக்கின்பாதம் ரயில்வே புக்ஸ்டால்
களிலும், பிரபல நியூஸ் ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

**"வக்கீல்" காரியாலயம்**

தபால்பெட்டி நெ. 26 :: கும்பகோணம். (தென் இந்தியா)